Registered as a News Paper in Sri lanka

Free Copy

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Job! With High Salary
Follow (C/638)
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 10 சனிக்கிழமை (23.04.2011) பக்கங்கள் 12 ஓசை – 204

## யாழ்.குடாவில் புதிய செயற்திட்டங்கள் சமுர்த்திப்பயனாளிகள் பயன்பெறுவர்


### மக்களுக்கு சரியான வழிகாட்ட அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கான சரியான பாதையைக் காட்டும் அதேவேளை, அபிவிருத்தியின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட வேண்டியது சமுர்த்தி உத்தியோகத்தர்களின் கடமையாக உள்ளதென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரின் யாழ்.செயலத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தங்களது பதவியை வேலைவாய்ப்பாக மட்டும் எண்ணாமல், மக்களுக்குச் சேவையாற்றும் பணியாகவும் ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டும். அரசு புதியதொரு நடைமுறையை சமுர்த்தி வேலைத் திட்டங்கள் ஊடாக கொழும்பில் ஏற்கனவே முன்னெடுத்துவரும் நிலையில், யாழ்.குடாநாட்டிலும் அவ் வேலைத் திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன. (11ஆம் பக்கம் பார்க்க)



## யாழில் தொழில் நுட்ப பல்கலைக்கழகம் கொரிய அரசின் உதவியுடன் உதயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பப்பல்கலைக்கழகம் ஒன்று மிக விரைவில் உருவாக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தொழில்நுட்ப கல்வித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை, தொழில்நுட்ப பல்கலைக் கழகமாக மாற்ற, தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது. கொரிய அரசாங்கத்தின் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தால் தொழில நுட்ப மற்றும் நிதியுதவிகள் இப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாகாணத்திலும் தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் தொழில்நுட்ப பல்கலைக் கழகங்களாக மாற்றப்படவுள்ளதாகவும், இப் பல்கலைக்கழகங்களில் தேசிய தொழில் முறைக் தகைமைப் பயிற்சிநெறி, நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது நாட்டில் 9 தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. யாழ்ப்பாணத்தில் நிருவகிக்கப்படவுள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இதன் எண்ணிக்கை 10 ஆக உயர்வடையவுள்ளதாக தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நகரசபைக்கு தலைவர் யார்? தடுமாறும் தமிழரசுக்கட்சி

## வவுனியா நகர மக்கள் விசனம்

(வவுனியா)

வவுனியா நகரசபைக்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் தமிழரசுக்கட்சிக்குள் குழப்பநிலை தோன்றியுள்ளது. ஏற்கனவே மேற்படி நகர சபைக்கு தலைவராக இருந்த திரு. எஸ். எம். ஜி.நாதன் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டார். இவர்மீது ஏகப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. கடந்த 2009 ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின்போதே திரு. எஸ். எம். ஜி.நாதன் தெரிவாகியிருந்தார். இவர் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து நீண்ட காலமாக வவுனியா நகரசபை செயல்இழந்து போய் உள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## சாயிபாபாவின் உடல்நிலை மோசம்; உயிர்காக்க போராடும் மருத்துவர்கள்

### புட்டபர்த்தி நோக்கி படையெடுக்கும் பக்தர்கள்



சாயிபாபாவின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவரை காப்பாற்றுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, அவருக்கு சிகிச்சை வழங்கி வரும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் பாபாவின் சொந்தஊரான புட்டபர்த்தியில், பாபாவின் பக்தர்கள் குவிந்த வண்ணம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக (11ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் வாழ்வாதார மேம்பாடு; பாரிய தொழிற்சாலை அமைக்கத்திட்டம்

### அமைச்சர் டக்ளஸ் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பிரதேசத்தில் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்தும்முகமாக எண்பத்திஐந்து லட்சம் ரூபா செலவில் பாரிய தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி தொழிற்சாலைக்கான நிதியினைப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி தொழிற்சாலையினை (11ஆம் பக்கம் பார்க்க)


## அகதிகளின் நண்பன் கனடா அமெரிக்க சஞ்சிகை தகவல்

உலகில் புலம் பெயர்ந்து வாழ்பவர்களுக்கு மிகவும் நட்பான நாடு கனடா என்றும் அதே சமயம் நெதர்லாந்து, இந்தியா ஆகிய நாடுகள் மிகக் குறைந்த அளவு நட்புடைய நாடுகள் என்றும் போபஸ் என்ற பிரபல அமெரிக்க சஞ்சிகையின் சமீபத்திய இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவானது கனடா, பேர்முடா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக நான்காவது இடத்தில் இருப்பதாக எச்.எஸ்.பி.சி. வங்கியின் (11ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தேவைகளை ஐ.நா. அறிக்கை நிறைவு செய்கிறது

### கடும் தொனியில் சாடுகிறார் கோத்தபாய



(கொழும்பு)

தான் நினைத்ததை செய்பவர் எனவும், எவரும் கருத்துக் கூறும் வரை பார்த்துக் கொண்டிருப்பவர் அல்ல எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பான் - கீ - மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிடுவதற்கு முன்னர், நீங்கள் ஏன் அது குறித்து கருத்து வெளியிட்டீர்கள் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப்பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள எவருக்கும் பான்-கீ-மூனின் அறிக்கை எதிராக எதனையும் செய்ய முடியும் என்றும், நிபுணர்கள் குழுவின் அறிக்கை இலங்கைக்கு எதிராக புலிகளின் தேவைக்கு அமையத் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்றும், யுத்த காலத்தில் இலங்கை அரசும் பாதுகாப்புப் படையினரும் பொறுப்புணர்வுடன் செய்யற்பட்டதாகவும், இந்த (11ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு – கிழக்கில் மேலதிக நீதிமன்றங்கள்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், மேலதிகமாக புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக நீதிமன்றங்கள் (11ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டு என்னைப் புறக்கணிக்கிறார்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் மனக்குமுறல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு சிங்கப்பூர் சென்ற விடயம் எனக்குத் தெரியாது, எனக்கு அறிவிக்கவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு எம்.பி.க்கள் கூட இது பற்றி எனக்குத் தெரிவிக்கவில்லை. என்னைத் திட்டமிட்டுப் புறக் கணிக்கிறார்கள். எனது செல்வாக்கு அதிகரிப்பதை சகிக்க முடியாத எம்.பி.ஒருவரே அனைத்துக்கும் காரணம். பொதுமக்களுக்கும் இவ்விடயம் நன்கு தெரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் மக்களுக்கு என்ன செய்கிறார்கள் எனப் பொதுமக்கள் கேட்கின்றனர். அவர்கள் கேட்பது சரி. ஆனால், நான் அன்றும் சேவை செய்தவன் இன்றும் சேவை செய்கின்றேன். நாளையும் சேவை செய்வேன்.

வெள்ள அனர்த்தத்தின் போது கிராமம் கிராமமாகச் சென்று உலர் உணவுப் பொருட்கள், உடு துணிகள் ஆயிரக் கணக்கானோருக்கு வழங்கினேன். இது ஊடகவியலாளர்களுக்கு நன்கு தெரியும். புது வருடத்திற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் பலவற்றிற்கு புத்தாடைகள் வழங்கினேன். பல்கலைக்கழகம் தெரிவான பெற்றோரை இழந்த மாணவர்களையும் பராமரித்து வருகின்றேன்.

இதுதான் மக்கள் சேவை எனது எம்.பி. சம்பளத்தை முற்றாக பொதுமக்களுக்காகவே பயன்படுத்துகின்றேன். நான் கௌரவப் பிச்சை எடுத்து பொதுமக்களுக்குச் சேவை செய்கின்றேன். இது போன்று ஏன் மற்றைய தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு முடியாது.

தங்களை வளப்படுத்த, செல்வாக்கு உள்ளவர்களை நிராகரித்துவிட்டு, தொடர்ந்தும் தாங்கள் எம்.பி.யாக இருக்கச் சில எம்.பி.க்கள் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். திட்டமிட்ட சதிதான் சிங்கப்பூர் விடயம் தொடர்பாக எனக்கு அறிவிக்க வில்லை. அவர்கள் சிங்கப்பூர் செல்லட்டும், பேசட்டும் ஏன் எனக்கு மட்டும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களாவது கூறவில்லையே என யோகேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்.

# பதவியுயர்வு பெற்றார்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராசா நீதிச்சேவைகள் அலுவலர் வகுப்பு I தரம் IIக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடை முறைக்கு வரும் வகையில் மேற்படி பதவியுயர்வுக்கான அறிவிப்பை நீதிச் சேவைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அமெரிக்க புலமைப் பரிசில் பெற்று புகழ்பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில், சட்டத்துறையில் முதுமானிப் பட்டம் பெற்ற நீதிபதி அவர்கள், சட்ட முதுமானிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். அத்துடன், லண்டன் நோர்டிக்ஹாம் பல்கலைக்கழகத்தினால் சர்வதேச விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

## யாழ்.கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின்

# ஆண்டு விழாவும் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிறீன்கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ஈஸ்ரர் கலைநிகழ்வுகளும் நாளையும், நாளை மறுதினமும் யாழ்.மத்தியூஸ் விதியில் அமைந்துள்ள கிறீன் கிங்ஸ் சனசமூக நிலைய திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.மரியன்னை பேராலயத்தின் பங்குதந்தை சகாயநாதர் அடிகளார், சுண்டிக்குளி தெற்கு ஜே/75 கிராமசேவையாளர் எஸ்.பிறேசிலா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில், சனசமூக நிலையத்தின் மணமானவர்கள், மணமாகாத அங்கத்தவர்களுக்கான கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டப் போட்டிகளும், பண்டிதர் பொன்.சுகந்தனின் நெறியாள்கையில் "இன்றைய அறிவியல் வளர்ச்சி இன்றைய சமூகத்துக்கு ஆக்கத்தினை செய்கிறதா? அல்லது அழிவினைச் செய்கிறதா? என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் என்பனவும் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.விஜயகாந் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதி விபத்தில் காயமடைந்தவர் நேற்றைய தினம் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 15ஆம் திகதி அன்று வல்லைவெளிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் மின்சாரக் கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ். அங்காடி வியாபாரி ஒருவர் நேற்றுக்காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம் விஜயரட்ணம் (வயது-31) என்ற அங்காடி வியாபாரியே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஏற்கனவே இச்சம்பவத்தில் இவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற அவரது உதவியாளரும் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா,12)

# 'சொண்ட்' நிறுவனத்தின் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

"சொண்ட்" நிறுவனத்தின் மாதாந்தக் கருத்தமர்வு இன்று காலை 10.00 மணிக்கு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

"யாழ்.மாவட்ட பொருளாதார மேம்பாட்டிலும், புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் வங்கித்துறையின் பங்கு" எனும் தொனிப்பொருளில் மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ஆர்.ஸ்ரீதரன் ஆய்வுரையாற்றவுள்ளார். (கா)

# மஹோற்சவம்

(ஆனைக்கோட்டை)

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி காலை இரதோற்சவமும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (104)

# மருதங்கேணியில் வாழ்வாதார உதவி

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனாப்பிற்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், வடமராட்சி கிழக்கிலுள்ள 70 பயனாளிகளுக்கு சிறு தொழிலை வழங்குவதாக தெரிவித்தார்.

இதில், ஆழியவளை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் இரு பயனாளிகளுக்கும், வெற்றிலைக்கேணி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 40 பயனாளிகளுக்கும், சிறுதொழிலுக்கான வலைகள் மற்றும் தெப்பம் என்பன வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர், கடற்தொழில் கூட்டுறவுப் பரிசோதகர், கிராம அலுவலர்கள் மற்றும் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(38)

# கல்லுண்டாய் வெளி குப்பை மேடாகிறது!

## சூழலைப் பாதுகாப்பது யார்?

யாழ்.கல்லுண்டாய்ப் பகுதியில் பழுதடைந்த பொருட்களை மூடை மூடையாகக் கொண்டு வந்து வீதி ஓரங்களில் ஒரு சில விஷமிகள் வீசி வருவதால், அப்பகுதியில் போவோர் வருவோர் துர்நாற்ற வாடைக்கு முகம்கொடுக்க முடியாமல் மூச்சுத்திணறும் நிலை ஏற்பட்டுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் குடிமனைகள் இல்லாத போதும், வயல்கள், கடற்கரைப் பகுதிகளில் மக்கள் நின்று தொழில் சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, உல்லாசப் பிரயாணிகள் மற்றும் வலி.தெற்கு, மேற்கில் இருந்து நாளாந்தம் யாழ்.நகருக்கு வந்து செல்வோர் இத்துர்நாற்ற வாடையைச் சுவாசிக்க நேர்வதால், தொற்று நோய்களுக்கு உள்ளாகின்ற அபாய நிலைமை ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (68)

# சொற்பொழிவு

(சாவகச்சேரி)

புன்னாலைக்கட்டுவன் நரசிம்ம வைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொடர் சொற்பொழிவு தினமும் நடைபெற்று வருகின்றது.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டிய பத்து நாட்களும் வருடா வருடம் சமயப் பாண்டித்தியம் பெற்ற சொற்பொழிவாளர்களின் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது அந்தவகையில் இன்று மாலை 5.30 மணிக்கு "ஆன்மீகவாழ்வு" என்ற பொருளில் சைவப்புலவர் பொன்.சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (11)

# ஆசிரியர்கள் பற்றாக்குறையை போக்குவதற்கு புதிய திட்டம் அமுல்

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை போக்கும் நோக்கில் மாகாண கல்வி திணைக்களம் ஆசிரியர் ஆளணியை சமப்படுத்தும் திட்டம் ஒன்றை அமலப்படுத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ள கல்வி வலயங்களுக்கு, ஏற்கனவே அளவுக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருக்கின்ற வலயங்களில் இருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் ஒரு திட்டத்தை தமது திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என்.ரி.ஏ. நிஷாம் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மாகாணத்தில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையில் இந்த திட்டம் மேற்கொள்ளப்படுவதாகவும் வேறு இடங்களில் இப்படியான நடவடிக்கைகள் இல்லை என்ற காரணத்துக்காக மாத்திரம் நல்ல விடயங்களை ஒத்திப் போட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்

# மீண்டும் குமுதினி



(நெடுந்தீவு)

நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு நேற்று வெள்ளிக்கிழமை முதல் தனது சேவையை ஆரம்பித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் குமுதினிப் படகு பழுதடைந்திருந்தமையால் அதன் போக்குவரத்துச் சேவை தடைப்பட்டிருந்தது. இதனால் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு செல்லும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். தற்பொழுது இதற்கு விடிவுகாலம் வந்துள்ளதாகவும் நெடுந்தீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

மனிதன் புலியைக் கொன்றால் அது விளையாட்டாக செய்த வேட்டை. புலி மனிதனைக் கொன்றாலோ மிருகத்தனம். குற்றத்திற்கும் நீதிக்குமிடையே உள்ள தொடர்பு இதனைப் போன்றது. - பெர்னாட்ஷா -

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தெரிந்து வைத்திருங்கள்

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதிகளில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் அரசாங்கம் தற்போது முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இந்த அபிவிருத்தியில் நாட்டின் எப்பகுதியும் புறக்கணிக்கப்படமாட்டாது என்று அரசு கூறிவருகின்றது. அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பிரதேச செயலர்பிரிவு ரீதியாக அபிவி ருத்தியை நோக்காகக்கொண்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட அரச திணைக்களங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் கலந்துகொண்டு பிரதேசத்தின் தேவைகள் குறித்தும், அபிவிருத்தி குறித்தும் ஆராய்ந்து வருகின்றன.

அண்மையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்களையும் பிரதேச செயலர்களையும் தெரியாது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தமது தெரியாத்தன்மையை பச்சையாக எடுத்துக்கூறிய போது, அந்த உறுப்பினர்களுக்குப் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதேச செயலர்களை அறிமுகம செய்து வைத்திருந்தார்.

கிராம அலுவலர்களையும், பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிந்திருக்கவில்லை என்றால் அவர்கள் களத்தில் இறங்கி மக்கள் சேவை செய்யவில்லை என்றே கருதிக்கொள்ள வேண்டும். இத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றம் சாட்டுவதால் எவ்விதமான பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. எங்கெல்லாமோ இருந்து குளிர்காய்ந்து உல்லாசமாக வாழ்ந்து வந்த இவர்களுக்கு மக்களின் அன்றாட தேவைகளுக்குத் தீர்வுகாணும் அதிகாரிகளை எங்கே தெரிந்திருக்கப் போகின்றது.

எங்கிருந்தோ வந்தார்கள், வாக்கு கேட்டார்கள் அதன்பின் நம்பி வாக்களித்த மக்களை நடுத் தெருவில் நிற்கவைத்து வேடிக்கை பார்க்க எண்ணுபவர்களுக்கு அதிகாரிகளைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தமிழ் உரிமைக்காகப் போராடுகின்றோம் என்று கூறிக்கொள்ளும் இவர்கள், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் அபிவிருத்தி தொடர்பாக எதுவும் பேசாது அரசியல் பேசி, அக்கூட்டங்களைக் குழப்பும் செயல்களில் ஈடுபட்டு வருவதால் புத்திஜீவிகள் மட்டத்திலான கண்டனங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

'தமிழ்' 'தமிழ்' என்று வாய்கிழியக் கத்தும் இவர்கள இக்கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசிவருவதால் மொழிபுரியாத அப்பாவி மக்கள் இவர்களைப் பற்றிப் பேசிக்கொள்வது காதுகளில் விழாமலும் இல்லை. மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்பதை புரிந்துவைத்துள்ள இவர்கள், மக்கள் எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதை நாடிபிடித்துப் பார்க்கவும் தவறிவிடுகின்றார்கள்.

மக்களுடைய தேவைகள் என்ன? அவர்களின் எதிர்பார்ப்புக்கள் எவை? எத்தகைய அணுகுமுறைகள் மூலம் அவற்றுக்கான தீர்வுகளைக் காண முடியும் என்பவற்றை இப்போது கொஞ்சம் கொஞ்சமாக இவர்கள் அறிந்துவருகின்றார்கள் என்பதை ஊதுகுழல்கள் மூலமாக அறியமுடிகின்றது.

மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் எங்கெல்லாம் நடைபெறுகிறதோ அங்கெலலாம் பிரசன்னமாகி "நாமும் கலந்துகொள்கிறோம்" என்பதை வெளியுலகிற்குக் காட்டிக்கொள்வதற்காக மங்கள விளக்கேற்றி, அமைச்சருடன் சரியாசனம் அமர்ந்து செயற்பட்டுவருவதை அவதானிக்கும்போது அவரால் முன்னெடுத்துச் செல்லவுள்ள அபிவிருத்தித்திட்டங்களுக்கு நாமும் ஆதரவு தருகின்றோம் என்பதைச் சொல்லில் சொல்லாமல் செயலில் காட்டிவருவது, சேர்ந்திருந்து அபிவிருத்தி வேலைகளைக் குழப்பியடிக்கும் நோக்கம் கொண்டதா? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

- ஆசிரியர் -

# பொதுமக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை!

## கிளிநொச்சி நிலை குறித்து சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதின் பின்னர் எந்தவொரு வைத்தியரும் அங்கு நியமனம் செய்யப்படவில்லை என கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ்.- கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக வட்டக்கச்சி வைத்தியசாலையில் வைத்தியர் எவரும் இல்லாத நிலை தொடர்பாகவும், அங்கு வைத்தியர் இல்லை என்பதன் காரணமாக அம்புலன்ஸ் வண்டிகூட அவ்வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் பாம்புக்கடி உட்பட பல்வேறுவிதமான நோய்களின்போது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் முழங்காவில் மருத்துவமனையில் ஒரு வைத்தியர் கடமையில் உள்ளார். அங்கு ஒரு அம்புலன்ஸ் வண்டியும் சேவையில் உள்ளது. அதேபோன்ற நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையின் நிலையும் உள்ளது. எனவே, வட்டக்கச்சி வைத்தியசாலைக்கு மட்டும் ஏன் இந்த நிலை எனவும் கேள்வியெழுப்பப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வருடாந்தம் ஐந்து மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி வருகின்ற அதேவேளை, வருடாந்தம் ஐந்து பேர் மருத்துவ பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர். இவர்கள் அனைவரையும் கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்தியர்களாக கடமையாற்ற சகல தரப்பினரும் ஊக்கப்படுத்துவதன் மூலமாக கிளிநொச்சி மாவட்டத்தின் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன் அப்பகுதி பொதுமக்களுக்கு வினைத்திறனுடனான மருத்துவ சேவையையும் வழங்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (பா)

# நான்காவது மாடியின் உள்ளக வேலைகள் வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடத் தொடரின் நிர்மாணம் குறித்து நான்காவது மாடியின் உள்ளக வேலைகளை யாழ். வைத்தியசாலையிடமே ஜெய்க்கா நிறுவனம் ஒப்படைத்துள்ளது.

இது குறித்து யாழ். செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் யாழ். வைத்தியசாலை பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவிக்கையில், இம்மாடித் தொடர் நிர்மாண நடவடிக்கைகள் 2006ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு ஜெய்க்கா நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டிருந்தது.

இருந்தும் அப்போதைய சூழ்நிலையில் கைகூடாததன் காரணமாக தற்சமயம் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென 2006ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் மூலம் நான்கு மாடிகளையும் பரிபூரணமாக நிர்மாணிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே அப்போது ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு இம்மாடித் தொடரின் நான்கு மாடிகளையும் நிர்மாணிப்பதுடன் நான்காவது மாடியின் உள்ளக வேலைகளுக்கு நிதி போதாமல் உள்ளது. எனவே, அவ்வேலையை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடமே ஜெய்க்கா நிறுவனம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்படி இம்மாடித் தொடரின் நான்காவது மாடியின் உள்ளக வேலையை யாழ். போதனா வைத்தியசாலையே பொறுப்பேற்று மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்திகளை முன்னெடுப்பேன்

(வவுனியா)

பிரதேசத்தின் அபிவிருத்தி, ஒற்றுமை, நேர்மையான அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதே எனது குறிக்கோள். இவ்வாறு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பிரதேச சபையின் தலைவர் கனகசபை சிவலிங்கம் இந்த பிரதேச சபையின் முதலாவது தலைவர் என்ற பெயருடன் பதவி ஏற்றல் வைபவத்தில் கன்னி உரை யாற்றியபோது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தனது உரையில் கூறியதாவது: பிரதேசத்தின் அபிவிருத்தி விடயத்தில் என்னால் முடிந்தளவு மக்களுடைய தேவைகளை இனம்கண்டு அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவேன்.

சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுடைய முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. சகல மக்களுடைய எதிர்பார்ப்புக்களும் வீண்போகாத வகையில் சேவை அமையும். ஒற்றுமையுடன் செயற்படுவோம். பொதுமக்கள், புத்திஜீவிகள், சமூகத் தலைவர்களுடைய ஆலோசனை எமக்குத் தேவையாகும். அது அபிவிருத்திக்கு உதவும் என்றார்.

# தடுப்பிலுள்ளவர்களை விடுவிக்குமாறு உறவினர்கள் என்னிடம் கோரிக்கை

## என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

தடுப்பிலுள்ளவர்களின் உறவினர்கள் தம்மைச் சந்தித்து தம் உறவுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மன்னார் அரச திணைக்கள அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.


இவ்விஜயத்தின் போது அமைச்சர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன், மன்னாரில் அமைக்கப்பட்டுவரும் உயர்நீதிமன்றத்தின் வேலைத் திட்டங்களையும் பார்வையிட்டார்.

இதன் போது அமைச்சருடன் மன்னார் மாவட்ட நீதிவான் ஏ. யுட்சன், நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.பி. பாரூக் மற்றும் சட்டத்தரணிகளும் கலந்து கொண்டனர்.

பின்னர் மன்னார் அரச செயலகத்தில் மன்னார் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. வேதநாயகன் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அரச அதிகாரிகளுடனான சந்திப்பினை அடுத்துத் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹக்கீம், தடுப்பில் உள்ளவர்களின் உறவினர்கள் தன்னை அடிக்கடி சந்திப்பதாகத் தெரிவித்தார்.



மேலும், அவர்கள் தங்கள் உறவுகளைப் புலிகளிடம் பிடித்துக் கொடுத்தவர்கள் தற்போது வெளியில் சுதந்திரமாக நடமாடித் திரிவதாகவும், தங்கள் உறவுகள் மாத்திரம் தடுப்பில் உள்ளனர் எனவும் கவலை தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் என்னிடம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# வடமராட்சி வலய மட்ட பெரு விளையாட்டுப் போட்டிமுடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பெருவிளையாட்டுப்போட்டியில் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு:

19 வயதுப் பிரிவு

கூடைப்பந்தாட்டம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

மென்பந்து கிரிக்கெட்

நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி.

சதுரங்கம்

வட இந்து மகளிர் கல்லூரி வடமத்திய மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

வலைப்பந்தாட்டம்

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடஇந்து மகளிர்கல்லூரி.

கரம்

வட மத்திய மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி.

எல்லே

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

உதைபந்தாட்டம்

விக்னேஸ்வராக் கல்லூரி, சென் தோமஸ் ஆர்.சி.ரி.எம்.எஸ், நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம்.

கரப்பந்தாட்டம்

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, வல்வை மகளிர் வித்தியாலயம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

வலைப்பந்தாட்டம்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

17 வயதுப் பிரிவு

வலைப்பந்தாட்டம்

வடஇந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

15 வயதுப் பிரிவு

சதுரங்கம்

வடஇந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை, வடமத்திய மகளிர் கல்லூரி,

பூப்பந்தாட்டம்

வட இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

நடைபெறாமல் உள்ள ஏனைய போட்டிகள் பாடசாலை இரண்டாம் தவணைக் காலப் பகுதியில் நடைபெறும் என வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.செல்வக குமரன் அறிவித்தார். (109)

# குறுந்திரைப்படத்திற்கான விருது

ரெ.நிஷாகரன் (யாழ்ப்பாணம்) பு.பிரணவன்





ஏஏஏ மூவிஸ் இன்ரநஷனல் திரைப்பட நிறுவனத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான குறுந்திரைப்படப் போட்டியில் பாடசாலைப்பிரிவில் சிறந்த குறுந்திரைப்படமாக ''காயம்'' திரைப்படம் தெரிவாகியுள்ளது.

ஹிமாலயா கிரியேசன்ஸ் நிறுவனத்தினால் ரெ.துவாரகன் தயாரித்து வழங்கிய இத்திரைப்படத்திற்கு 7 விருதுகள் கிடைத்துள்ளன.

இதில் சிறந்த இயக்குநர், ஒளிப்பதிவு, இசையமைப்பு, படத்தொகுப்பு, கலை இயக்கம் என்பனவற்றுக்கான 6 விருதுகள் ரெ.நிஷாகரனுக்கும் சிறந்த ஒலிப்பதிவுக்கான விருது பு.பிரணவனுக்கும் கிடைத்துள்ளது.

# 278 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள முரசுமோட்டை கிராமத்தில் இதுவரை 278 குடும்பங்களைச் சேர்ந்த 743 பேர் மீளக்குடியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 33குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம் நிறுவனம் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட 80 குடும்பங்களுக்கு நேர்ப்திட்டத்தின் கீழ் வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீளக்குடியமர்ந்தவர்களில் 15 பெண்கள் கணவன்மாரை இழந்த நிலையில் இளம் விதவைகளாக வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (110)

# விளையாட்டுக் கழகங்களுக்கான புத்தாண்டு விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸாரின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான புத்தாண்டு விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திக்கமுனை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் கொத்தல தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்விற்கான சகல ஏற்பாடுகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விழாவில் ஒருநாள் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறும் வீரவீராங்கனைகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (100)

# மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருடன் பொது அமைப்புப் பிரதிநிதிகள் கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

வத்திராயன் கிராமிய மீள் எழுச்சிக்குழு நிர்வாகத்தினர், கிராம முன்னேற்றச் சங்கத்தினர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனாப்புக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு வத்திராயன் முன்பள்ளியில் மருதங்கேணி உதவி அரச அதிபர் திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

வத்திராயன் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இதனை அடுத்து அமைச்சின் செயலாளர் குறித்த கிராம மக்கள் அனைவருக்கும் நிரந்தர வீடுகள் மற்றும் கிணறு, மலசலகூடங்கள் என்பனவற்றை அமைத்துக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் அடுத்து வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதன்போது தமது பகுதிமக்களுக்கும் கடற்றொழில் உபகரணங்களை பெறறுத்தருமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைச்சின் செயலாளர் 25 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு தாம் அமைச்சுடன் கலந்தாலோசித்து பெற்றுத்தருவதாகத் தெரிவித்தார். (38)

# உயர்குருதி அமுக்கம்



கேள்வி:- குருதி அமுக்கம் என்றால் என்ன?

பதில். இதயத்தில் இருந்து உடலின் ஏனைய பாகங்களுக்கு குருதி நாடிகளின் ஊடாகச் சென்று மயிர்த்துளைக்குழாய் வழியாக நாளங்கள் ஊடாக மீள இதயத்திற்கு வருகின்றது. இதற்கு உரிய சக்தி இதயத்தசைகள் சுருங்கி விரிவதால் ஏற்படுகின்றது. இதயத் தசைகள் சுருங்கும் போது குருதி இதயத்தில் இருந்து நாடிகளின் ஊடாகச் செல்கின்றது. இதன்போது குருதி அமுக்கம் அதிகமாக இருக்கும். இதயத்தசைகள் தளரும்போது நாளங்களிலிருந்து குருதி இதயத்தினை அடையும். இதன்போது நாடியில் குருதியின் அமுக்கம் குறைவாக இருக்கும். பொதுவாக இதயத்தசை சுருங்கும் போது உள்ள அமுக்கத்தினை மேலேயும் தளரும் போது உள்ள அமுக்கத்தினை கீழேயும் குறிப்பிடுவர் (உதாரணமாக120/80)

கேள்வி: குருதி அமுக்கம் பிரதானமாக எவ்வாறு கட்டுப் படுத்தப்படுகின்றது?

பதில்: நரம்புக் கணத் தாக்கங்கள் மூலமும், இதயத் தசைகளின் செயற்பாடுகள் மூலமும் ஓமோன்களின் செயற்பாட்டின் மூலமும் கட்டுப் படுத்தப்படுகின்றது.





கேள்வி: உயர் குருதி அமுக்கம் என்றால் என்ன?

பதில்: சாதாரணமாக வயது வந்தவர்களின் குருதி அமுக்கம்120/80mmHg அளவில் இருக்கும் 120-139/80-89 வரையிலான அளவு உயர்குருதி அமுக்கத்திற்கான ஆரம்பம் 140 - 159/90-99 முதலாவது நிலை உயர்குருதி அமுக்கம் >160/ >100 இரண்டாம் நிலை உயர்குருதி அமுக்கம்.

கேள்வி: உயர் குருதி அமுக்கம் ஏன் எற்படுகின்றது?

பதில்: யாதொரு நோய் நிலை இல்லாது ஏற்படலாம், அல்லது வேறு நோய்நிலையின் விளைவாக ஏற்படலாம்.

கேள்வி: உயர் குருதி அமுக்கத்தினை ஏற்படுத்தும் நோய்நிலைகள் யாவை?

பதில்: சிறுநீரகக் கோளாறு, சலரோகம், குருதியில் கொலஸ்ரோல் அதிகம் ஏற்படல், உடற் பருமன் அதிகரித்தல், அதிரீனல் சுரப்பியில் மாற்றங்கள், தைரொயிட் சுரப்பியில் மாற்றங்கள், பராதைரொயிட் சுரப்பில் மாற்றம், பெருநாடி சுருங்குதல், நோவிற்கு எடுக்கும் சில மருந்துகள்.

கேள்வி: யாதாயினும் நோய் நிலையின்றி உயர் குருதியமுக்கம் ஏற்படக் காரணங்கள்?

பதில்: பரம்பரைக் காரணிகள், பிறக்கும் போது குறைந்த நிறை உடையோர், சூழற் காரணிகளாக, உடற்பருமன் அதிகரிக்கும் சூழல், அதிக மதுபானம் பாவித்தல், அதிக உப்பு உள்ள உணவுகளை உண்ணல், மன அழுத்தம், குருதியில் உள்ள ஓமோன்களில் ஏற்படும் மாற்றம்.

கேள்வி: உயர்குருதி அமுக்கம் உள்ளோர் செய்ய வேண்டிய பரிசோதனைகள் யாவை?

பதில: ஈ.சி.ஜி, சிறுநீரில் புரதம், குருதி உள்ளதா எனப் பரிசோதித்தல், குருதியில் உள்ள வெவ்வேறு கொழுப்புகளில் அளவு, குருதி வெல்ல மட்டம். குருதியில் உள்ள யூரியா, சிறியற்றினைன் சோடியம் பொட்டாசியம் என்பனவற்றின் அளவுகள்.

கேள்வி: உயர் குருதி அமுக்கத்தினைக் கட்டுப் படுத்தும் முறைகள் யாவை?

பதில்: வாழ்க்கை முறையில் மாற்றம் வேண்டும். நெருக் கீடுகள் இல்லாது வாழவேண்டும். புகைப்பிடித்தல் கூடாது. உடற் பருமன் அதிகமாயின் அதனைக் குறைக்க வேண் டும். தாவர உணவுகளை உண்ண வேண்டும். மிருக உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பழங்கள், மரக்கறி, என்பனவற்றை அதிகம் உண்ண வேண்டும். நிறை கொழுப்புகளை எண்ணையினைத் தவிர்க்க வேண்டும். உணவில் சேர்க்கப்படும் உப்பின் அளவினைக் குறைக்க வேண்டும். ஒரு நாளைக்கு 6 கிராம் உப்பிற்கு மேல் எடுக்கக் கூடாது. உடல் களைக்க உடற்பயிற்சி தினமும் அரைமணி நேரம் செய்ய வேண்டும். மருந்துகள் பாவனையை எக்காரணம் கொண்டும் வைத்தியரின் ஆலோசனை இன்றி நிறுத்தக்கூடாது.

கேள்வி: பொதுவாக ஒருவரது குருதி அமுக்கம் எவ்வளவு இருந்தால் நல்லது?

பதில்: 140/80 அல்லது அதற்குக் கீழ்.



# இந்து ஆலயப் புனரமைப்புக்கு மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களைப் புனரமைப்பது தொடர்பாக தேவை மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டுச் மாவட்ட கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்து ஆலயங்களைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியினால் கடந்த காலங்களில் பல ஆலயங்கள் புனரமைக்கப்பட்ட போதிலும், அவற்றைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்த முடியாமல் போயுள்ளது.

இதற்கு மீள்குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்த நிதி கிடைக்கப்பெற்றதே இப்பிரச்சினை ஏற்பட்டமைக்குக் காரணம் என அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படமாட்டாது. இதில் பொறிக்கடவை அம்மன் ஆலயம், ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம், புலோப்பளை அறத்தியம்பாள் கோயில், வில்லடி ஐயனார் ஆலயம் உள்ளிட்ட 14 ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அவ்வவ் ஆலய பரிபாலன சபையினர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் 37 ஆலயங்களைப் புனரமைப்பது தொடர்பாக பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் இணைந்து தேவை மதிப்பீடு ஒன்றைத் தயாரித்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினர், பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (110)

# காணாமற்போன மீனவர்கள் கரை திரும்பியதாக தகவல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்று காணாமல்போனதாகத் தெரிவிக்கப்பட்ட சகோதர மீனவர்கள் இருவரும் கரைக்கு வந்து சேர்ந்துள்ளதாக வடமராட்சி கடற்தொழில் சமாசத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த சகோதர மீனவர்களான பாபு கிருபாகரன் (வயத 26), பாபு சசிகரன் (வயது 24) ஆகியோரே காணாமல் போய் மீண்டும் கரைக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த படகு கடலில் பழுதடைந்ததை அடுத்தே திக்குத்திசை தெரியாமல் சென்றுவிட்டதாகவும் பின்னர் ஒருவாறு திரும்பி வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் பொய்யானது என அவர் மேலும் தெரிவித்தார். (100)

# பூநகரி வைத்தியசாலையை நிர்மாணிக்க வாடியடியில் ஐந்து ஏக்கர் காணி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பூநகரி வைத்தியசாலை மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பன புதிதாக வேறு இடத்தில் நிர்மாணிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கென பூநகரி வாடியடியில் ஐந்து ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கடந்த செவ்வாய்க் கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பூநகரி வைத்திய சாலை அமைந்திருந்த இடத்தில் படையினர் நிலைகொண்டிருக்கின்றனர்.

யுத்தம் நிறைவடைந்து அப்பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில் அப்பகுதி மக்களின் வைத்திய வசதியை மேம்படுத்தும் நோக்கில் பூநகரி வைத்தியசாலையில் நிலைகொண்டிருக்கும் படையினரிடம் அப் பகுதியை வைத்திய சாலையின் நடவடிக்கைகளுக்கு அனு மதிக்குமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் படையினர் தமது தேவை கருதி அங்கு நிலை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான மாற்று ஏற்பாடாக பூநகரி வாடியடிப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் பூநகரி வைத்தியசாலையையும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையையும் நிர்மாணிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (பா)

# பஸ் தரிப்பிடமின்றி பயனாளிகள் அவலம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் உள்ள 2 பேருந்து தரிப்பிடங்கள் பயணிகள் பயன்படுத்த முடியாமல் மிகவும் பாழடைந்து காணப்படுவதால், போக்குவரத்துச் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்குவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதியில் இருந்து பூநகரி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும், பரந்தன் சந்தியில் அமைந்துள்ள இப்பேருந்துத் தரிப்பிடங்கள் மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுவதால், பயணம் செய்யும்போது வீதியில் நினறே பேருந்துக்காகக் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பூநகரி வீதியூடாகப் பயணிக்கும் பயணிகளும் பூநகரி வீதி, முல்லைத்தீவு வீதியூடாக கண்டாவளை, விசுவமடு, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகள் முல்லைத்தீவு, பரந்தன் வீதியிலும், வவுனியா, யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் ஏ-9 வீதியிலும் நீண்டநேரம் காத்து நின்று தமது பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதைவிட மழைகாலங்களில் வீதியில் நிற்கமுடியாமல் கடைகளுக்குள் சென்று நிற்பதால் பேருந்துகள் அப்பயணிகளை ஏற்றாது சென்றுவிடும் சந்தர்ப்பங்களும் நிகழ்ந்துள்ளதாகப் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, பயணிகள் நலனைக் கருத்திற் கொணடு 2 பேருந்து நிலையங்களையும் பொது மக்களின் பாவனைக்குப் பயன்படத்தக்க வகையில் செயற்படுத்தித் தருமாறு சம்பந்தப் பட்டவர்களிடம் பயணிகள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# கம்பன் விழாவின் 3 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகத்தின் கம்பன் விழாவில் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் தலைமையுரையை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் த.முத்துக்குமாரசாமி, தொடக்கவுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் மற்றும் 'கற்றுத் தருகிறான் கம்பன்' என்னும் பொருளில் தனியுரையை த.இராமலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து கம்பனில் பெரிதும் வெளிப்படும் வள்ளுவத் தடம் என்னும் விடயம் பற்றிய சுழலும் சொற்போர் இடம்பெறவுள்ளது. இதில் நடுவராக பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வில் தலைமையுரையை கொழும்பு கம்பன் கழக செயலாளர் ஜெ.விஸ்வநாதன், தொடக்கவுரையை சேலம் மார்கழிப் பெருவிழா தலைவர் ஏ.கே.பழனியப்பன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் அமரர்களான சண்முகநாதக் குருக்கள், திருமதி வித்துவான் வேலன், திருமதி ஈழத்து சிவானந்தன், இ.முருகையன், பொன் வல்லிபுரம், கா.பொ.இரத்தினம், இ.திருவாதிரை, செ.குணரத்தினம், கே.கே.சுப்பிரமணியம், ச.சரவணமுத்து, வை.அநவரத விநாயகமூர்த்தி ஆகியோருக்கான அஞ்சலி அரங்கம் இடம் பெறவுள்ளது.

இதில் அஞ்சலியுரையை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா வழங்கவுள்ளார். தொடாந்து 'வானில் கம்பன் வடிக்கும் கண்ணீர்' என்னும் விடயம் பற்றிக் கவியரங்கம் இடம்பெறவுள்ளது. இதில் நடுவராக தமிழ் நாட்டைச் சேர்ந்த கவிமாமணி அப்துல்காதர் கலநது கொள்ளவுள்ளார். (10)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(23.04.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 10 ஆம் நாள்.

இராகுகாலம்9.00–10.30, சுபநேரம் 3.00 –4.30,

நட்சத்திரம் மூலம் மு.ப.10.04 வரை,

திதி: ஷஷ்ஷ பி.இ 12.38 வரைக்கும்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, வீண் செலவு, மனச் சஞ்சலம்.

**ரிஷபம்:–** மன மகிழ்ச்சி, நண்பர் உதவி, நல்ல செய்தி.

**மிதுனம் :–** தேக சுகம், பண வரவு, காரிய சித்தி.

**கடகம்:–** உட்பகை, மேலோர் எதிர்ப்பு, பொருள் இழப்பு.

**சிம்மம்:–** பண வரவு, நண்பர் உதவி, மனம் மகிழ்ச்சி.

**கன்னி :–** மனச் சஞ்சலம், வீண் செலவு, மேலோர் பகை.

**துலாம் :–** மன மகிழ்ச்சி, பண வரவு, நல்ல செய்தி.

**விருச்சிகம்:–** காரிய சித்தி, தேக சுகம், வீண் செலவு.

**தனுசு:–** முயற்சி வெற்றி, நண்பர் உதவி, பண வரவு.

**மகரம்:–** மனச் சஞ்சலம், வீண் செலவு, காரியத்தடை.

**கும்பம் :–** பண வரவு, மன மகிழ்ச்சி, குதூகலம்.

**மீனம்:–** நண்பர் உதவி, பண வரவு, பொருள் சேரும்.

# போட்டி முடிவுகள்

(கொக்குவில்)

குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலய திருஇருதய சபையால் 150 ஆவது யூபிலி ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. பெயர் விபரம் வருமாறு: பிழைதிருத்தம் - கீழ்பிரிவு ஆன் செளமியா ராஜ்குமார், ஜெனிசியா மரியதாஸ், ஜோன் செளமியா பொமிக்கோ,

வினாவிடைப் போட்டி - கீழ்ப் பிரிவு - டயானா அருள் சீலன், பீனுஷா சகாயநாதன், மேரி கிஷாந்தி இராஜசூரி, ஜெனன் ஜொலிற்றா (இருவர் மூன்றாமிடம்).

பிழைதீர்க்கும் மந்திரம் பாடுதல் : மத்திய பிரிவு -பௌஸ ரீனா பெனடிக்ற், பசான் வாசிப்புப் போட்டி: மத்திய பிரிவு - யாழரசி கிறிஸ்த்துராசா, அனுசியா டேவிட், மெல் கிறிஸ்ரின் கிறிஸ்துராசா. மேற்பிரிவு - நிஷாந்தன் யோன்சன், மேரி பிரின்சியா அன்ரன், ஒனேசியா யோசெப் மென்சன். இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாகப்பர் ஆலய மண்டபத்தில் பங்குத்தந்தை வண.ஆர். சி.எக்ஸ். நேசராசா அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.(68)



யாழ்.பல்கலைக்கழக ஊடக வழங்கல் பயிற்சி மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகமும் சிவில் சமூகமும் எனும் பொருளிலான கருத்தமர்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும் சமூகவியல் துறை விரைவுரையாளர் ஆர்.பகீரதி. அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# ஆதாரமற்ற நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அரசாங்கம் ஒருபோதும் பதிலளிக்காது

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

**ஆதாரமற்ற ஐ.நா.நிபுணர் குழுவின் போர்க் குற்ற அறிக்கைக்கு இலங்கை ஒருபோதும் பதிலளிக்காது. மீறி அழுத்தங்கள் கொடுக்கப் படுமாயின் வீட்டோ அதிகாரம் உள்ள தோழமை நாடுகளுடன் இணைந்து பான் கீ மூன் மற்றும் அவரது பின்னணியில் உள்ள பயங்கரவாத செயல்பாட்டாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல எச்சரித்தார்.**

இங்கு அவர் மேலும் கூறியதாவது, பான் கீ மூனின் தன்னிச்சையான செயற்பாட்டினால் ஐ.நா.நிபுணர் குழு இலங்கைக்கு எதிராக வெளியிட்டுள்ள போர்க் குற்ற அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நேர்மையற்றதும் பக்கச்சார்பானதுமான மேற்படி குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆதாரமற்றவையாகும். எனவே இவ் அறிக்கை தொடர்பில் அரசாங்கம் அலட்டிக் கொள்ளாது.

இலங்கைக்கு எதிராக பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளனர். இடம் பெயர்ந்து உலக நாடுகளில் உள்ள புலி செயற்பாட்டு அமைப்பினரும் குறிப்பிட்ட சில மேற்குலக நாடுகளுமே இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற அறிக்கையின் பின்னணியில் உள்ளனர்.

எனவே இனங்காணப்பட்டுள்ள இவர்களின் சவால்களுக்கும் வீட்டோ அதிகாரம் உள்ள தோழமை நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசு முகம் கொடுக்கும்.

நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட சமூக அபிவிருத்திகளை பின்னடைவிற்குத் தள்ளி இலங்கையின் 30 ஆண்டு கால புலிப் பயங்கரவாதத்திற்கு எதிரான அறிக்கைகளை முன் வைக்காமல், பான் கீ மூனும் அவரது சகாக்களும் இறுதி மூன்று வாரத்தில் பாரிய மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று கூறி இலங்கைக்கு எதிராக அறிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

புலிகளின் தலைவர்களை பாதுகாப்பதற்கு இவர்கள் தான் அன்றும் அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுத்தனர். எனவே பான் கீ மூனின் நிபுணர் குழுவிற்கு இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதிலளிக்காது எனவும் தெரிவித்தார்.

30 ஆண்டு கால யுத்தத்தை ஆராயாமல் இறுதி மூன்று நாள் போர்க் குற்றம் இடம்பெற்றுள்ளதாக பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. பக்கச்சார்பானதும், நீதியற்றதுமான, இலங்கைக்கு எதிரான மேற்படி போர்க்குற்றச்சாட்டுக்களை எந்த ஒரு சர்வதேச நாடும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக 10 இலட்சம் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கை நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பிக்கப் பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இவ்வாறு கூறினார்.

## ரஷ்யா வழங்கும் ஆதரவிற்கு அரசாங்கம் நன்றி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது ரஷ்யா அளிக் கும் ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ரஷ்ய விஞ்ஞானியான யூரிககாரின் இலங்கைக்கு வந்த 50 வருட நிறைவை ஒட்டி கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான்கீ மூனின் நிபுணர் குழு தற்போது வெளியிட்டுள்ள அறிக்கைக்கு ரஷ்யா தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது பாராட்டத்தக்க விடயம் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் இலங்கை தொடர்ந்து ரஷ்யாவுடன் நல்லிணக்கத்தைப் பேணும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# நாட்டின் இறையாண்மையைக் காக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## அஸ்கிரிய மல்வத்து மஹாநாயக்கர்கள் அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அஸ்கிரிய மல்வத்து மஹா நாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மஹாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சினால் நான்காவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரித் ஓதும் புண்ணிய நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அழைக்கும் நோக்கிலே இந்த விஜயம் அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் நிபுணத்துவ குழு அறிக்கை தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மஹாநாயக்க தேரர்களுக்கு தெளிவு படுத்தியுள்ளார்.

இந்தநிலையில் நாட்டிற்கு எதிரான வெளிநாட்டு சக்திகளைத் தோல்வியடையச் செய்வதற்கு நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும் என மஹா நாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

# எழுத்துமூலமான சாட்சியங்களை அரசியல் கட்சிகள் சமர்ப்பிக்கலாம்

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் எழுத்து மூலமான சாட்சியங்களைச் சமர்ப்பிக்க முடியும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சாட்சியங்களைத் திரட்டும் பணிகள் பூர்த்தியான போதிலும், அரசியல் கட்சிகள் எழுத்து மூல சாட்சியங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப் படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

ஆரம்பத்தில் சாட்சியங்களை முன் வைப்பதாக சில கட்சிகள் அறிவித்த போதிலும், இதுவரையில் எந்தவொரு அரசியல் கட்சியும் எழுத்து மூலமான சாட்சியங்களைச் சமர்ப்பிக்கவில்லை என உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு அரசியல் கட்சி சாட்சியங்களைச் சமர்ப்பித்தால் அதனை ஏற்றுக் கொண்டு, குறித்த சாட்சியம் தொடர்பிலும் ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் சாட்சியங்களை சமர்ப்பிப்பதாக முன்னர் வாக்குறுதியளித்திருந்தன.

கட்சியின் தலைவர் சம்பந்தன் நாடு திரும்பியதன் பின்னர் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த எந்தவொரு கட்சியும் இதுவரையில் சாட்சியங்களை சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிரான போராட்டம்

# ஐ.நா.பணியாளர்களுக்கு ஆபத்து ஏற்படாது

## ஊடக மத்திய நிலையப்பணிப்பாளர் கூறுகிறார்

(கொழும்பு)

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிரான போராட்டங்களின் மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களுக்கு ஆபத்து ஏற்படாது என தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்புக் கிளையில் பணியாற்றி வரும் தனி நபர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக பாரிய போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி எந்தத் தனிப்பட்ட நபர்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பல ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களுக்கு அரசாங்கம் போதியளவு பாதுகாப்பை வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு உத்தியோகபூர்வமாக வெளிவிவகார அமைச்சின் ஊடாக கோரியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டால் தங்களையும் ஆவணங்



களையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பணியாளர்களுக்கு ஏற்கனவே அந்த அமைப்பு பயிற்சி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒத்திவைப்பு


(கொழும்பு)

தனியார் துறையில் தொழில் புரியும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான சட்ட மூல விவாதம் பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் இந்த மாதம் 27 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட இருந்ததாக தொழில்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

எனினும் இந்தச் சட்டமூலம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதால் சட்டமூலம் தொடர்பான விவாதம் பிற்போடப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.


# மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏழு ஓட்டங்களால் வென்றது




(சென் லூசியஸ்)
பாகிஸ்தான் அணிக்கெதிரான ரி-20 போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏழு ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான ஒரு போட்டியைக் கொண்ட ரி-20 போட்டி நேற்று முன்தினம் சென் லூசியஸ் மைதானத்தில் நடைபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பாடத்தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல்.எம்.பி. சிமென்ஸ் 44 பந்துகளில் இரண்டு சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் டி.எம். பிராவோ 42 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அப்துர் ரஹ்மான், அஜ்மல், வஹாப் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 151 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் உமர் அக்மல் 41, அசாட் ஷபீக் 25 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் அஜ்மல் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டி. பிசோ நான்கு, ராம்போல் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக டி. பிசோ தெரிவானார்.




**மேற்கிந்தியத்தீவு மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி இன்று சென் லூசியஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதையொட்டி இரு அணித் தலைவர்களும் கிண்ணத்தை நேற்று அறிமுகம் செய்துவைத்தவேளை.**

## ஜூன் முதல் அமுலாகிறது




சர்ச்சைகளைத் தொடர்ந்து குட்டைப் பாவாடை அணிந்து விளையாட வேண்டும் என்ற விதி ஜூன் முதலாம் திகதி முதலே அமுலுக்கு வரும் என உலக பட்மின்ரன் சம்மேளனம் அறிவித்துள்ளது.

பட்மின்ரன் வீராங்கனைகள் உடை அணியும் விடயத்தில் புதிய விதிமுறைகளைக் கொண்டு வந்த உலக பட்மின்ரன் சம்மேளனம், மே முதலாம் திகதி முதல் அனைத்து வீராங்கனைகளும் கட்டாயம் குட்டைப்பாவாடை அணிந்து தான் விளையாட வேண்டும் என்று உத்தரவிட்டது. இந்த ஆடைக் கட்டுப்பாடு விதிமுறைகள் இந்தியாவில் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்திய வீராங்கனை சாய்னா நேவால், குட்டைப் பாவாடை அணிந்து விளையாடுவதற்கு நான் எதிரானவள் அல்ல. ஆனால் எந்த உடை, அணிந்து விளையாட வேண்டும் என்பதை வீராங்கனைகள் முடிவுக்கே விட்டு விட வேண்டும். கட்டாயப்படுத்தக்கூடாது என்றார். இதே போல் சீன வீராங்கனைகள் லி ஸிருய், யு யாங் உள்ளிட்டோரும் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் புதிய உடை விதியை ஒரு மாதத்திற்கு உலக பட்மின்ரன் சம்மேளனம் தள்ளிவைத்துள்ளது. இதன்படி ஜூன் முதலாம் திகதி முதல் இந்த விதி அமுல்படுத்தப்படுகிறது.

## பாகிஸ்தானுக்குப் பயணம்

(புதுடில்லி)
இந்திய கிரிக்கட் அணி எதிர்வரும் ஜூன் மாதம் பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் என, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரைக் கண்டுகளிக்க, தாமும் செல்லவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.


கிரிக்கட் ஊடாக இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான ராஜதந்திர பேச்சுவார்த்தைகள் தொடர்வதை தாம் விரும்புவதாகவும், கடந்த கால கசப்பான வரலாற்றை மறந்து, கிரிக்கெட் ஊடாக நல்ல நட்புறவை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான் கிரிக்கெட் தொடர் இந்த ஆண்டு நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவே என பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 2009ஆம் ஆண்டு லாஹூரில் வைத்து இலங்கை கிரிக்கட் அணி வீரர்கள் தாக்கப்பட்டதை அடுத்து, பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் முதலாவது கிரிக்கட் அணி, இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.



## நிர்வாகத்தின் முடிவு



(கொல்கத்தா)
கங்குலியின் தேர்வு, கொச்சி அணி நிர்வாகத்தின் முடிவைப் பொறுத்தது. என் கையில் எதுவும் இல்லை என கொச்சி அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் பங்கேற்கச் சென்ற பின், கொச்சி அணியின் தலைவராக முன்னாள் இந்திய தலைவர் கங்குலி செயற்பட உள்ளார் எனச் செய்திகள் வெளியாகின்றன. ஆனால், நான் எப்போது இலங்கை செல்ல உள்ளேன் எனத் தெரிய வில்லை. ஐ.பி.எல். தொடரில் முழுமையாகப் பங்கேற்க விரும்புகிறேன். கங்குலியின் தெரிவு நிர்வாகத்திடம் தான் உள்ளது. இது தொடர்பில் என்னால் பதிலளிக்க முடியாது. அவர் சிறந்த வீரர் என்றார்.

இதேவேளை, ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கும் முழு நம்பிக்கையுடன் கங்குலி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர இடம் கிடைக்கும்

(புதுடில்லி)
இந்திய டெஸ்ட் அணியில் யுவராஜ் சிங்குக்கு இதுவரை நிரந்தர இடம் கிடைக்கவில்லை. ஆனால் உலகக் கிண்ணப் போட்டியில் அவர் சிறப்பாக ஆடி இருந்ததால் அவருக்கு டெஸ்ட் அணியில் இனி நிரந்தர இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.பி.எல். போட்டி முடிந்ததும் இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் செல்லவுள்ளது. அங்கு 5 ஒருநாள் போட்டி, 3 டெஸ்ட் போட்டித் தொடர்களில் ஆடவுள்ளது. அதில் டெஸ்ட் அணியில் யுவராஜ்சிங்குக்கும் இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றுது. 6 வீரர்கள் மேற்கிந்தியத்தீவு செல்லாமல் ஓய்வு எடுக்கப்போவதாகவும் இதனால் யுவராஜ் சிங்குக்கு ஒரு நாள் போட்டித் தலைவர் பதவி வழங்கப் போவதாகவும் கூறப்பட்டது.

ஆனால் டெண்டுல்கர், டோனி இருவர் மட்டுமே ஓய்வு எடுப்பது உறுதி



படுத்தப்பட்டுள்ளது. எனவே யுவராஜ் சிங்குக்கு தலைவர் பதவி வழங்கப்படும் என்பதை உறுதி செய்ய முடியாது என்று கிரிக்கெட் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கங்குலியின் ஓய்வுக்குப் பின்னர் டெஸ்ட் அணியில் இடம்கிடைக்கும் என யுவராஜ்சிங் எதிர்பார்த்தமை குறிப்பிடத்தக்கது.



**இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் டில்சான் தனது மனைவியுடன் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைமை அலுவலகத்திற்குச் சென்றவேளை...**

## கிண்ணத்தை வென்றது



(ஸ்பெயின்)
ஸ்பானிஷ் கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்று சம்பின் பட்டம் வென்றது.

சர்வதேச ஸ்பானிஷ் கிண்ணக் கால்பந்து தொடர் ஸ்பெயின் நாட்டின் வாலன்சியா நகரில் நடந்தது. இதன் இறுதிப் போட்டியில் ரியல் மாட்ரிட், பார்சிலோனா அணிகள் மோதின. இதில் முதல் 90 நிமிடத்திடத்திற்கு இரு அணிகளும் ஒரு கோல் கூட அடிக்காமல் சம நிலை வகித்தன. அதன் பின் 103வது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணிக்காக கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோல் அடித்து அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார். இறுதியில் ரியல் மாட்ரிட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டம் வென்றது.

# புதிதாக அணுமின் நிலையங்களை உலகில் அமைக்க வேண்டாம்

## நோபல் பரிசு பெற்ற 9 அறிஞர்கள் வேண்டுகோள்

(வொஷிங்டன்)

அணு மின்சாரம் மலிவானதோ, அணுமின்சாரம் தயாரிப்பு முறைகள் பாதுகாப்பானதோ, அணு மின் நிலையத்தை நிறுவுவது எளிதானதோ இல்லை என்பதால், உலகில் இனிப் புதிதாக அணு மின்சார உற்பத்தி நிலையங்களே வேண்டாம் என்று சமாதானத்துக்கான நோபல் விருது வாங்கிய 9 உலக அறிஞர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியா, சீனா உட்பட அணு மின்சார நிலையங்களில் அதிகம் முதலீடு செய்துள்ள 31 நாடுகளின் தலைவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அவர்கள் இதைக் குறிப்பிட்டுள்ளனர்.

அணுகுண்டு எத்தகைய ஆபத்தானது என்பதற்கும் அணு மின்சார நிலையங்கள் எந்த அளவுக்கு ஆபத்தானவை என்பதற்கும் ஜப்பானைவிட வேறு சிறந்த உதாரணம் உலகுக்குத் தேவை இல்லை.

அனல், புனல் தவிர மின்சாரம் தயாரிக்க இயற்கையில் எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றுக்குச் செலவு அதிகமானாலும் மனித குலத்துக்கு ஆபத்து இல்லாத அந்த வழிகளையே இனிக் கைக்கொள்ள வேண்டும்.

உலகில் இப்போதுள்ள 400-க்கும் மேற்பட்ட அணுமின்சார உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் மொத்த மின்சாரத்தின் அளவு வெறும் 7 சதவீதம்தான் என்பதால் இந்த அணு மின் நிலையங்களின் உற்பத்தியை நிறுத்தி அவற்றை அக்குவேறு ஆணி வேறாகக் கழற்றி அப்புறப்படுத்தினாலும் பெரிய நஷ்டம் வந்துவிடப்போவதில்லை. அதே சமயம் இப்போதுள்ள தலைமுறையும் இனிவரும் தலைமுறையும் அணுக்கதிர் வீச்சிலிருந்து தப்பிக்கும்.

இயற்கையினாலோ, போரினாலோ அணுமின்சார நிலையங்களுக்கு ஆபத்து நேரிட்டால் அதன் விளைவு மிகப்பெரிய பேராபத்தாக இருக்கும் என்பதை ஹிரோஷிமா, நாகசாகி மட்டும்மல்ல செர்நோபில், புகுஷிமாவும் உணர்த்திவிட்டன.

அணு மின்சார நிலையங்களுக்கு எந்த ஆபத்தும் வராவிட்டாலும்கூட அணுக்கழிவுகளைப் புதைப்பது மிகப் பெரிய பிரச்சினை என்பதை விஞ்ஞானிகள் அனைவருமே ஒப்புக்கொள்வார்கள். மனித குலத்துக்கே மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்கும் இந்த அணு மின்சார நிலையங்களை மூடி, அப்புறப்படுத்திவிட்டு, ஆபத்தில்லாத வகையில் மின் ஆற்றலைப்பெறுவோம் என்று அணு விஞ்ஞானிகள் வேண்டுகோளில் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஆர்ச்பிஷப் டெஸ்மாண்ட் டுட்டு, அடோல்ஃபோ பெரஸ் எஸ்கிவெல், ஜோஸ் ரமோஸ் ஹோர்தா, பெண் நோபல் அறிஞர்கள் பெட்டி வில்லியம்ஸ், மைரெட் மெகயர், ரிகோபெர்டா மெஞ்சுதும், ஜோடி வில்லியம்ஸ், ஷிரின் எபாடி, வாங்காராய் மாதாய் ஆகியோர் கையெழுத்திட்ட நோபல் அறிஞர்கள் ஆவர்.

## தொலைக்காட்சி பார்ப்பதால் குழந்தைகளுக்கு மாரடைப்பு

(சென்னை)

ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால், பின்னாளில் அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அவுஸ்ரேலிய வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


இதற்காக தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் 7 வயதுக்கு உட்பட்ட சுமார் ஆயிரத்து 500 குழந்தைகளிடம் சிட்னி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, அதிக நேரம் ரி.வி பார்த்த குழந்தைகளின் ரத்த நாளங்கள் தளர்வான நிலையில் இருப்பது தெரிய வந்தது. ஆனால், அதிக நேரம் உடற்பயிற்சி செய்த குழந்தைகளின் ரத்த நாளங்கள் நல்ல திடகாத்திரமாக இருந்தது.

எனவே, உடற்பயிற்சி எதுவும் இல்லாமல் எந்த நேரமும் தொலைக்காட்சி முன்பே குழந்தைகள் இருந்தால் எதிர்காலத்தில் மாரடைப்பு மற்றும் உயர் ரத்த அழுத்தம் ஏற்படும் என ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் டாக்டர் கோபிநாத் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானில் தொடரும் அவலம்

## தாய்ப்பாலிலும் பரவியது கதிர்வீச்சு



(டோக்கியா)

ஜப்பானில் தாய்ப்பாலிலும் கதிர்வீச்சுப் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதையடுத்து கர்ப்பிணிப் பெண்களும் அச்சமடைந்துள்ளனர். ஜப்பானில் கடந்த மாதம் 11 ஆம் திகதி பூகம்பமும், சுனாமியும் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து புகுஷிமா அணுஉலைகள் வெடித்தன. இதிலிருந்து வெளியேறிய கதிர்வச்சு உணவு பொருட்கள், குடிநீர், பால் போன்றவற்றில் பரவியது.

இதைத் தொடர்ந்து அந்த அணு உலைகளைச் சுற்றி 20 கி.மீற்றர் சுற்றளவில் குடியிருந்த மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். உணவுப் பொருட்களில் ஊடுருவி பரவியிருந்த அணுக் கதிர்வீச்சு தற்போது தாய்ப் பாலிலும் பரவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் உள்ள சிட்டிசன் மிரூட் என்ற அமைப்பு தாய்மார்கள் மற்றும் குழந்தைகளை கதிர்வீச்சு எந்த அளவில் பாதித்துள்ளது எனக் கண்டறிய ஆய்வு மேற்கொண்டனர். அப்போது 4 தாய்மார்களை கதிர்வீச்சுத் தாக்கி இருப்பது தெரிய வந்தது. மேலும் அவர்கள் குழந்தைகளுக்கு புகட்டும் தாய்ப் பாலிலும் கதிர்வீச்சுத் தாக்கம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அது மிகக் குறைந்தளவில் மட்டுமே பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறிக்கை ஜப்பான் அரசிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சகம் விரிவான ஆய்வு மேற்கொள்ள இருப்பதாக பிரதமர் நேட்டோ கானின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே குழந்தைகளுக்குப் பாலூட்டும் எத்தனை தாய்மார்களைக் கதிர்வீச்சு பாதித்துள்ளது என்பதைக் கண்டறிய அரசு விரிவான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என சிட்டிசன் அமைபபின் தலைவர் கிகுகோ முராகமி கேட்டுக்கொண்டுள்ளார்.

குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களைக் கதிரவீச்சுப் பாதித்திருப்பதால், கர்ப்பிணிப் பெண்களும் பீதி அடைந்துள்ளனர். தங்கள் வயிற்றில் வளரும் குழந்தைகளைக் கதிர்வீச்சு தாக்கியுள்ளதா? என்பதைக் கணடறிய மிகவும் பதற்றத்துடன் உள்ளனர். அணுஉலைகள் வெடிதத புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து வெளியாகும் கதிர்வீச்சு இன்னும் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, அப்பகுதியிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் அங்கு குடியேற அனுமதிக்கப்படவில்லை. மேலும், அப்பகுதியில் நுழைய பிரதமர் நேட்டோ கான் தடை விதித்துள்ளார்.

இதற்கிடையே வெளியேறியவர்கள் தங்களது வீடுகளில் இருந்து பொருட்களை எடுத்து செல்ல பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. கதிர்வீச்சுத் தாக்காத கவச உடைகளை அணிந்து அவர்கள் தங்கள் பொருட்களை எடுத்துச் செல்கின்றனர்.

# பாகிஸ்தான் உளவு அமைப்பிற்கு பயங்கரவாதிகளுடன் தொடர்பா?

## அடியோடு மறுக்கிறார் தளபதி கயானி

(இஸ்லாமாபாத்)



பயங்கரவாதிகளுடன் பாகிஸ்தான் உளவு அமைப்புக்கு தொடர்புள்ளதாகக் கூறப்படுவதைப் பாகிஸ்தான் ராணுவத் தளபதி மறுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படைகள் மீது ஹக்கானி பிரிவைச் சேர்ந்த தலிபான்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்காக இந்தப் பிரிவின் தலைவர் சிராஜுதின் ஹக்கானியை பற்றித் தகவல் கொடுப்போருக்கு 22 கோடி ரூபா வெகுமதியை அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த ஹக்கானி பிரிவுத் தலிபான்களுக்கும், பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக அமெரிக்க கூட்டுப்படைகளின் தளபதி மைக்முல்லன் குறைகூறியிருந்தார். இது குறித்து பாகிஸ்தான் பத்திரிகைக்குப் பேட்டியளித்த மைக் முல்லன் குறிப்பிடுகையில்-

ஐ.எஸ்.ஐ., உளவு அமைப்பில் உள்ள அனைவரும் ஹக்கானி பிரிவுடன் தொடர்புள்ளவர்கள் எனக் கூறவில்லை.

எனினும் இந்த அமைப்பில் உள்ளவர்களுக்கு அந்தப் பயங்கரவாதிகளுடன் தொடர்பு உள்ளது என்றார். இது குறித்து பாகிஸ்தான் ராணுவ தளபதி அஷ்பக் கயானி குறிப்பிடுகையில், பயங்கர வாதிகளுடன் பாகிஸ்தான் உளவு அமைப்புக்கும், ராணுவத்துக்கும் தொடர்புள்ளதாக அமெரிக்கா கூறுவதை ஏற்க முடியாது.

நாங்கள் பயங்கரவாதிகளை ஒடுக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருவதே இதற்குச் சாட்சி. அமெரிக்கா எங்களுககு எதிராக இந்த விடயத்தில் பிரசாரம் செய்கிறது எனத் தெரிவித்தார்.

# அகதி அந்தஸ்து வழங்குமாறு கோரி அவுஸ்ரேலிய தடுப்பு முகாமில் கலவரம்

(சிட்னி)

அவுஸ்ரேலியா சிட்னி மாநிலத்திலுள்ள விலாவூட் அகதிகள் தடுப்பு முகாமில் நேற்றுமுன்தினம் இரவு கடும் கலவரம் ஏறபட்டதாகவும், கட்டிடங்களுக்கு தீவைக்கப்பட்டதாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்கள பேச்சாளர் சன்டி லோகான் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளில் சுமார் 100பேர் இந்த கலவரத்தில் ஈடுபட்டதாகவும், தளபாடங்கள், கணனிகள், சமையல் பாத்திரங்கள், மருத்துவ உபகரணங்கள், உட்பட தடுப்பு முகாமிலிருந்த பொருட்கள் சேதமாக்கப்பட்டிருப்பதாகவும் கூரைகளில் ஏறி நின்ற அகதிகள் ஓடுகளைக் கழற்றி அதிகாரிகளை நோக்கி எறிந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 9 கட்டிடங்களுக்கு தீவைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். தங்களுக்கு அகதி அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் என்றும் தங்களைத் தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் கலகக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


அவுஸ்ரேலியாவிற்கு பெருந்தொகையான அகதிகள் வந்திருப்பதாகவும், அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களே இந்த கலவரத்தில் ஈடுபட்டதாக அவுஸ்ரேலிய குடிவரவு குடியகல்வுத்துறை அமைச்சர் கிறிஸ் பொவன் தெரிவித்துள்ளார்.

அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் அவர்கள் கவலை கொண்டிருப்பதாகவும் இதனாலேயே இவர்கள் வன்முறைகளை நாடியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்த அமைச்சர் வன்முறை இதற்குத் தீர்வாகாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களில் யாராவது கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தக் கலவரங்களுக்கு அவுஸ்ரேலிய தலைமை அமைச்சர் யூலியா கிலாட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கலவரங்களில் ஈடுபடுவதால் அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது என்றும் கலவரங்களில் ஈடுபடுவது சட்டத்திற்கு முரணானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஈராக், மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளே பெரும்பாலும் இந்தக் கலவரத்தில் ஈடுபட்டிருப்பதாக அவுஸ்ரேலிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

# சிறையிலிருந்து விடுதலை கிடைத்த போதிலும் வேறு வழக்கில் கைதான வீரப்பனின் மனைவி



(பெங்களூர்)

சிறையிலிருந்து விடுதலையானதும் முத்துலட்சுமி வேறொரு வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சந்தனக் கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி. இவர் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு மேட்டூரில் வசித்து வந்தார்.

3 வருடங்களுக்கு முன்பு முத்துலட்சுமியை கர்நாடகப் பொலிசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

வீரப்பனின் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்ததாக அவர் மீது மைசூர் சாம்ராக்நகர் தடா நீதிமன்றில் 5 வழக்குகள் தொடரப்பட்டது. இந்த வழக்குகளில் முத்துலட்சுமி மீதான குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படவில்லை என்று கூறி அவரை நீதிமன்றம் விடுதலை செய்தது.

முத்துலட்சுமி விடுதலையானதும் மேட்டூர் சென்று உறவினர்களைச் சந்தித்துவிட்டு சென்னையில் படிக்கும் மகள்களுடன் தங்க முடிவு செய்து இருந்தார். முத்துலட்சுமியின் வருகையை எதிர்பார்த்து மேட்டூரில் உறவினர்கள் காத்து இருந்தனர். ஆனால் பெங்களூர் பரப்பன அக்ரகார சிறையில் இருந்து முத்துலட்சுமி விடுதலையானதும் அங்கு தயாராக இருந்த தமிழகப் பொலிசார் வேறொரு வழக்கில் மீண்டும் கைது செய்தனர்.

மறைந்த கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தல், வழக்கு கோபி நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.

இதில் முத்துலட்சுமி மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. இந்த வழக்கு விசாரணை முடியாததால் முத்துலட்சுமியை விடுதலை செய்ய தமிழக பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்து இருந்தனர்.

இதையடுத்து முத்துலட்சுமி மீண்டும் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தத் தகவல் அறிந்த முத்துலட்சுமியின் உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர். முன்னதாக முத்துலட்சுமி நிருபர்களிடம் கண்ணீர் மல்கக் கூறியதாவது:-

வீரப்பனின் மனைவி என்பதால் எனக்கு அநீதி இழைக்கப்படுகிறது. என் கணவர் மீதான எந்தக் குற்றச் செயலிலும் எனக்குத் தொடர்பு இல்லை.

அவரது மறைவுக்குப் பிறகு என்னைப் பொலிஸார் கைது செய்தனர். விடுதலையானதும் சென்னையில் விடுதியில் தனியாகத் தங்கிப்படிக்கும் மகள்களுடன் சேர்ந்துவாழ முடிவு செய்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

# வங்கியில் இருந்த 1 கோடி பணத்தை அரித்த கறையான்

(பார்பராங்கி)

உத்தரப் பிரதேச மாநிலத்தில் தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கியின் பணப் பெட்டியில் வைக் கப்பட்டிருந்த ரூபா 1 கோடி பணம் கறையானால் அழிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டமை வங்கி ஊழியர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உத்தரபிரதேச மாநிலம பார்பராங்கி மாவட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் கிளை ஒன்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மதியம் பணப்பரிவர்த்தனைக்காக வங்கியின் முகாமையாளர் கீதா திரிபாதியின் தலைமையில் ஊழியர்கள் வங்கியிலுள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த பணப் பெட்டியைத் திறந்தனர். பெட்டியை திறந்த வங்கி அதிகாரிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெட்டியில் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பணம் அனைத்தையும் கறையான் தின்றிருப்பது தெரியவந்தது. கறையான்களால் அரித்துப்போன பணத்தின் மதிப்பு ரூ.1 கோடி என வங்கி நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது. இது குறித்து உரிய விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், கறையான்களால் சேதமடைந்த பணம் ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்க ஜனாதிபதியின் கருத்திற்கு இதய சிகிச்சை நிபுணர் கண்டனம்

(புதுடில்லி)

மலிவான மருத்துவச் சிகிச்சைக்காக இந்தியாவுக்குச் செல்லாதீர்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பேசியிருப்பதற்கு பிரபல இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் ரமாகாந்த் பாண்டே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மும்பையில் உள்ள ஆசிய இதயவியல் கழகத்தின் தலைமை நிர்வாகியான பாண்டே, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்தவர்.

ஒபாமா பேசியிருப்பதற்கு தனது கருத்தைத் தெரிவித்துள்ள பாண்டே, ரூபாயைவிட டொலரின் மதிப்பு அதிகமாக இருப்பதால் இந்தியாவில் சிகிசசைக்கு ஆகும் செலவு குறைவாக இருக்கிறதே தவிர, மருத்துவச் சிகிச்சையின் தரத்தில் எந்தவிதக் குறைவும் இல்லை. இந்திய டாக்டர்கள் சர்வதேச தரத்துக்கு இணையாக சிகிச்சை தருவதிலும், நோயைக் கண்டறிவதிலும் வல்லவர்கள்.

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு நோயாளிகளில் 5வீதம் தான் அமெரிக்கர்கள். மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் (வளைகுடா நாடுகள் உட்பட) ஆபிரிக்க நாடுகளிலிருந்தும்தான் அதிகம் பேர் வருகின்றனர். ஒபாமா எச்சரித்தாலும் சிகிச்சைக்காக அமெரிக்கர்கள் இந்தியாவுக்கு வருவது குறையாது என்றார்.





## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



(17.04.2011 இல் கொண்டாடினார்)

நான்காவது அகவையில்

பெயர்: யூ.அருண்மாறன்
முகவரி: இன்பருட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பிவையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# பொருட்களின் விலை உயர்வு கவலையளிப்பதாக உள்ளது

## பிரதமர் மன்மோகன் சிங்

(புதுடில்லி)

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, அதனால் ஏற்படும் உணவுப் பணவீக்க அதிகரிப்பு ஆகியன கவலையளிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டார்.



டில்லியில் நடைபெற்ற பொதுச் சேவை தின நிகழ்ச்சியில் பேசிய அவர்,

நமது பொருளாதாரம் மிகவும் சிறப்பாக உள்ளது. கடந்த 7 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார நிலை திருப்திகரமான முன்னேற்றத்தை எட்டி வந்துள்ளது. கடந்த கால வளர்ச்சியைப் பார்த்தாலே இது தெளிவாகபுரியும். மேலும் சர்வதேச அளவில் ஏறபட்ட பொருளாதார தேக்க நிலையையும் நமதுநாடு தாங்கி நின்றது. இதிலிருந்தே நாட்டின் பொருளாதாரம் எந்த அளவுக்கு வலுவாக உள்ளது என்பதை உணரலாம். ஆனாலும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக ஒட்டுமொத்த பணவீக்கமும், உணவுப் பொருள் பணவீக்கமும் மிகவும் கவலையளிக்கும் அளவுக்கு அதிகரித்துள்ளது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. இருப்பினும் வளர்ச்சியைப் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இது மிகவும் தர்மசங்கடமான, இக்கட்டான நடவடிக்கையாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

2009 ஆம் ஆண்டு நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வரட்சி காரணமாக வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்டு, உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தது.

அப்போதிலிருந்து தொடர்ந்து விலைகள் உயர்ந்து வருகின்றன. இருப்பினும் இப்போது கடந்த சில மாதங்களாக நிலைமையில் சிறிதளவு முன்னேற்றம் தென்படுகிறது.

உணவுப் பணவீக்கம் இரட்டை இலக்கத்திலிருந்து ஒற்றை இலக்க அளவுக்கு குறைந்துள்ளது. வேளாண் உற்பத்தி அதிகரிப்புத் தொடர்பாக நீண்ட கால கொள்கை வகுக்க வேண்டிய அவசியம் உருவாகியுள்ளதாகவும் மன்மோகன்சிங் குறிப்பிட்டார்.

# தங்கபாலுவை கட்சித் தலைமையிலிருந்து நீக்க காந்தி சிலையிடம் கையளிக்கப்பட்டது மனு



(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலுவை அப் பதவியில் இருந்து நீக்கக் கோரி தமிழகம் முழுவதும் அவருக்கு எதிராக உள்ள கோஷ்டிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதேபோல் மன்னார் குடியிலும் தங்கபாலு வுக்கு எதிராக வித்தியாசமான முறையில் போராட்டம் நடந்தது.

மாவட்ட மாணவர் காங்கிரஸ் தலைவர் தெய்வசிவம் ஆகியோர் முன்னிலையில் இளைஞர் காங்கிரஸ் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலுவுக்கு எதிரான காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கபாலுவை பதவி விலகக் கோரி கோஷமிட்டபடியே, மாணவர் காங்கிரஸ் மாவட்டச் செயலாளர் அருண் காந்திக்கு மொட்டை அடித்தனர்.

மேலும் தங்கபாலு மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காந்தி சிலையிடம் மனுக் கொடுத்தனர்.



புனித வெள்ளியை முன்னிட்டு தஞ்சை அடுத்த மாதாக்கோட்டை புனித லூர்து அன்னை ஆலயத்தில் இருந்து திருச்சிலுவை தோளில் ஏந்தி சிலுவைப்பாடு நிகழ்ச்சி நடந்தது.

# இளைஞர்களை ஏமாற்றிய தொழில் முகவர் கைதானார்

(கொழும்பு)

மலேசியாவில் தொழில் வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி இளைஞர்களை ஏமாற்றிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாகத்தெரிவித்து மலேசியா அழைத்துச் சென்று அங்கு குறித்த இளைஞர்கள் நிர்க்கதியான நிலைக் குத் தள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாறு ஆறு இளைஞர்கள் ஏமாற்றப்பட்டதாகவும்இதில் நான்கு இளைஞர்கள் இதுவரையில் நாடு திரும்பியுள்ளதாகவும் குறிப்பிடப்படு கிறது.

மேலும் இரண்டு இளைஞர்கள் மலேசியாவில்தொடர்ந்தும் நிர்க்கதி யான நிலையில் தவிப்பதாக சிங்கள ஊடக மொன்று செய்திவெளியிட்டுள் ளது.

சிலாபம் பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# சுற்றுலாப் பயணிகளுக்கு மலேரியா பரிசோதனை

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும் அனைத்துச் சுற்றுலாப் பயணிகளையும் மலேரியா மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த மலேரியா தடுப்புப்பிரிவு நட வடிக்கை எடுத்துள்ளது. மலேரியா தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாக மலேரியா தொற்றுநோய் தடுப்புப்பிரிவின் பணிப் பாளர் மருத்துவர் தெரிவித்துள்ளார். வருடந்தோறும் உலகளாவிய ரீதியில் ஒரு மில்லியன் மக்கள் மலேரியா தொற்றினால் உயிரிழப்பதோடு, நாளொன்றுக்கு மூவாயிரம் பேர் உயிரி ழப்பதாகவும் மருத்துவர் சுட்டிக்காட்டி யுள்ளார். இலங்கையில் மலேரியாத் தொற்று குறைவாகக் காணப்பட்டாலும் சுற்றுலாப் பயணிகளினால் மலேரியா தொற்று பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. மலேரியாத் தொற்று நோயைத் தடுக்கும் வகையிலான புதிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளதாக மலேரியா தடுப்புப்பிரி வின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள் ளார்.

## மூவாயிரம் சதுர கிலோமீற்றரில் கண்ணிவெடிகள் அகற்றல்



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங் களில் சுமார் மூவாயிரத்து 721 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் பூர்த்தியாகி யுள்ளன.

இந்த நிலப்பரப்பில் புதைக்கப்பட்டி ருந்த மூன்று இலட்சத்து பதினொரு ஆயிரத்து 298 நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

நிலக்கண்ணி வெடிகளுடன் மேலும் பல குண்டுகளும் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மேலும் 500 தொடக்கம் 700 சதுரகிலோ மீற்றர் நிலப்பரப்பில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் தற்போது இடம்பெறுவரு வதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல மேலும் கூறியுள்ளார்.

# உரிய முறையில் கடமையாற்ற முடியாதவர்கள் பதவி வகிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை

## சஜித் எம்.பி கூறுகிறார்

(கொழும்பு)

**உரிய முறையில் கடமையாற்ற முடியாதவர்கள் பதவி வகிப்பதில் அர்த்தமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரே மதாச தெரிவித்துள்ளார். தாமோ அல்லது வேறு நபர்களோ கட்சியில் சுபிட் சத்தை ஏற்படுத்தாது பதவி வகிப்பது குற்றச் செயலாகவே நோக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.**



நாடாளுமன்றத்திற்கு தெரிவானதன் பின்னர் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத உறுப்பினர்கள் மன்னிக்க முடியாத குற்றவாளிகளே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அர சாங்கமொன்றை அமைக்குமாறு கோரி யே மக்கள் வாக்களித்துள்ளதாகவும், இந்தக் கோரிக்கையை உதாசீனம் செய்ய முடியாது என அவர் குறிப் பிட்டுள்ளார்.

கட்சியில் தமது கோரிக்கைகள் செவிமடுக்கப்படாத பட்சத்தில் நாடாளு மன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக் களை பொதுமக்களிடம் வெளியிட நேரிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார். கட்சியின் சில உறுப்பினர்கள் பிளவினை ஏற்படுத்த முயற்சி மேற் கொண்டு வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபடும் நிலை உரு வாகியுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ரணில் அணி, சஜித் அணி என ஐ.தே.க. இரண்டாகப் பிரியும் நிலை தோன்றியுள்ளதாகவும் கட்சி வட் டாரங்களிலிருந்து மேலும் தெரியவரு கிறது. கட்சித்தலைமை சஜித் பிரேமதாச சார்ந்தவர்களைத் தொடர்ந்தும் ஓரங் கட்டி வருவதனால் இந்நிலை உருவாகி யுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலை உருவாவதற்கான பிரதான காரணம் 20பேரடங்கிய ஐ.தே.க செயற் குழுவிற்கு ரணில் விக்கிரமசிங்க சார்பான 16பேர் நியமிக்கப்பட்டுள்ள மையும், தேசிய அமைப்பாளர் பதவிக்கு பிரேரிக்கப்பட்ட சஜித் ஆதர வாளரான ரஞ்சித் மத்துமபண்டாரவை ஓரங்கட்டி விட்டு ரணில் விக்ரமசிங்க விற்கு நெருங்கிய ஒருவரை நியமிப் பதற்கு அவர் முயற்சிசெய்து வருகின் றார் எனவும் மேலும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாகப் புதிய நாடாளு மன்ற உறுப்பினர்களான புத்திக்க பத்திரன போன்றோர் சஜித் பிரேமதாச வுடன் இணைந்து செயற்படும் பலருக்கு கட்சியின் செயற்குழுவில் அங்கம் வகிப் பதற்கான வாய்ப்புக் கிடைக்காமல் போவதாகவும் ஐ.தே.கவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இந்நிலையில் ஐ.தே.க ரணில் - சஜித் அணிகள் என இரு அணிகளாகப் பிரிவதைத் தடுக்க முடியாது தெனவும் வாக்கெடுப்பிற்குச் செல்லாது கட்சியின் பிரதித் தலைவர் பதவியை பொறுப்பேற்றமை தொடர்பாக சஜித் பிரேமதாசவுக்கு அவரது ஆதர வாளர்கள் தொடர்ந்தும் குறைகூறி வரு வதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டி னார்.

# வெள்ளைக் கொடி வழக்கு மே மாதத்திற்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக் கொடி வழக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தில் கடந்த புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதி தரப்பு சார்பாக கடந்த புதன்கிழமை சாட்சியங்கள் ஆரம்பிக்கப் படவிருந்தன.

எனினும் இந்த வழக்கு விசார ணையை ஒத்திவைக்குமாறு பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி நலின் லத்துவ ஹெட்டி மேல் நீதிமன்றத்தின் மூவரடங் கிய நீதிபதிகள் குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்பட்டுள்ள நிலைமைகளின் கீழ் சாட்சி யங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவித்து வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறு பிரதி வாதி தரப்பு சட்டத்தரணி வேண்டு கோள் விடுத்தார்.

எனினும் பிரதிவாதி தரப்பு சாட்சி யங்களை ஏற்கனவே தயார்படுத்தி யிருந்ததாக சட்டத்தரணி குறிப்பிட்டார்.

வெள்ளைக்கொடி விவகார வழக் கின் முறைப்பாட்டாளர் தரப்பை வழி நடத்துகின்ற பிரதி சொலிசிஸ்டர் நாயகம் புவனேக அலுவிஹாரே, பிரதிவாதி தரப்பின் கோரிக்கையை தாம் ஆட் சேபிக்கவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதிவாதி தரப்பின் சார்பாக சாட்சி யமளிப்பதற்காக நாடாளுமன்ற உறுப் பினர் அனுரகுமார திஸாநாயக்க, உயர் நீதிமன்றத்தின் பதிவாளர், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் பதிவாளர், தேசிய ஆவணப் பாதுகாப்பு திணைக்களத்தின் செயலாளர் மற்றும் பத்திரிகை முறைப் பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டாளர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இது தவிர பிரதிவாதி தரப்பு சார் பாக சாட்சியமளிப்பதற்கு அழைக்கப் பட்டிருந்த சண்டே லீடர் செய்திப் பத்திரிகையின் பெண் ஊடகவியலாளர் ஃப்ரெடெரிகா ஜான்ஸ் எதிர்மனுதாரர் ரஸ்லியா விக்கிரமதுங்க நீதிமன்றத்தில் பிரசன்னமாகாததால் அவருக்கு மீண்டும் அறிவித்தல் விடுக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்றம், வழக்கு விசாரணையை மே மாதம் நான்காம் திகதிக்கு ஒத்திவைத்தது.

# தென்பகுதி கடல்நீரில் கதிர்வீச்சு கலக்கவில்லை

## தேசிய அணுசக்தி அதிகாரசபை தகவல்

(கொழும்பு)

தென் பகுதிக் கடல் நீரில் கதிர்வீச்சுக் கலந்துள்ளதா என்பதைக் கண்டறிவதற் காக கடல் நீரின் மாதிரிகளை பரி சோதனைக்கு உட்படுத்தியதாக தேசிய அணுசக்தி அதிகாரசபை தெரிவித் துள்ளது.

குறித்த கடற் பிராந்தியத்தில் ஏழு இடங்களில் இருந்து பெறப்பட்ட நீர்க் கூறுகள் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தேசிய அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி விமல தர்ம அபேவிக்ரம தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனைகளின் போது தென் பகுதிக் கடலில் கதிர்வீச்சுக் கலக்க வில்லை என்பது உறுதி செய்யப்பட்ட தாக அவர் கூறினார்.

ஜப்பானின் ஃபுகுஷிமா அணு உலைகளில் ஏற்பட்ட கசிவை அடுத்து இலங்கைக்கு அதன் தாக்கம் ஏற்படு வதைத் தடுக்கும் வகையில் தேசிய அணுசக்தி அதிகார சபை தொடர்ந்தும் பல்வேறு பரிசோதனைகளை மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

# முஸ்லிம் காங்கிரஸ் பேராளர் மாநாடு சூடு கிளம்பும் ஏற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 22ஆவது பேராளர் மாநாடு மே மாதம்15ஆம் திகதி வவுனியாவிலுள்ள நூர்தீன் மசூர் அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் பேராளர் மாநாட்டுக்கு 1500 பேராளர்களை நாடு முழுவதிலிருந்தும் அழைப்பதற்குக் கட்சி தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப் பேராளர் மாநாட்டின்போது புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதாகவும் கட்சி யாப்பில் சில மாற்றங்கள் முன்மொழியப் படலாமெனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விகிதாசார தேர்தல் முறை மாற்றப்பட்டு தொகுதிவாரி முறையைக் கொண்ட புதிய தேர்தல் முறை கொண்டு வரப்படவுள்ளதால் கட்சியின் யாப்பில் சில மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும், இதற்கிணங்கவே இம் மாற்றங்களை 22 ஆவது பேராளர் மகாநாட்டில் முன்மொழியப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

அண்மையில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி சட்டமூலத்தில் ஆளும்கட்சி அமைச்சர் ஒருவர் தமக்கேற்றபடி மாற்றங்களை ஏற்படுத்தியிருந்ததாகவும் அதனால் சிறுபான்மைக் கட்சிகளுக்கு தேர்தல்களில் பாதிப்புக்கள் ஏற்படுமென முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியிருந்ததோடு, அச்சவாலுக்கு தமது கட்சி எதிர்காலத்தில் சிறப்பாக முகங்கொடுக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து லசித் மாலிங்க ஓய்வு



(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னணி வேகபந்துவீச்சாளரான லசித் மாலிங்க, டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் மும்பை இண்டியன் அணிக்காக விளையாடி வரும் மாலிங்க, நேற்றுவெள்ளிக்கிழமை இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

எனினும், ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் 20 ஓவர் போட்டிகளிலும், தான் விளையாட விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.வித்தியசாமான பந்துவீச்சு காரணமாக 'மாலிங்க ஓவ் சிலிங்க" என அழைக்கப்படும் லசித் மாலிங்க, காயம் காரணமாக தன்னால் இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற முடியாதுள்ளதாக அறிவித்திருந்தார். அதை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டிருந்தது.

எனினும், அவர் தொடர்ந்தும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றுவது குறித்து விசனம் தெரிவித்திருந்த இலங்கை கிரிக்கெட் சபை, மாலிங்கவை நாடு திரும்பி, காயத்திற்கு சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

27 வயதான மாலிங்க இதுவரை 30 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 101 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மே 30 இற்கு முன் தேர்தல் நடத்தாவிடின் வாக்காளர் பட்டியலில் பிரச்சினை

## எச்சரிக்கிறது பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் எஞ்சியுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாவிட்டால், வாக்காளர் இடாப்பு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரும் என பப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட வேண்டியமை 2009ஆம் ஆண்டு வாக்காளர் டாப்பின் பிரகாரம் என அந்த அமைப்பின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

மே மாதம் 30ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் நடாத்தப்படுமானால், அது 2010ஆம் ஆண்டிற்கான வாக்காளர் டாப்பின் பிரகாரமே இடம்பெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் சட்டப் பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன், மே மாதம் 30ஆம் திகதி தேர்தல் நடைபெறாவிட்டால் பாராளுமன்றத்தின் மூலம் புதிய சட்டமொன்றை நிறைவேற்ற நேரும் எனவும் பெப்ரல் அமைப்பின் பிரதி நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியராச்சி குறிப்பிட்டுள்ளார்.

### அகதிகளின்...

சர்வதேச புலம்பெயர்ந்தோர் பற்றிய ஆய்வு தெரிவித்திருப்பதாக இந்த சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு மக்களுடன் நட்பாகி, மொழியைக் கற்று புதிய கலாசாரத்திற்கு தம்மை பழக்கப் படுத்திக் கொள்வதற்கு இந்த நான்கு நாடுகள் மிகவும் இலகுவாகவுள்ளன என்று குறிப்பிட்டள்ள இந்த அறிக்கையில், இந்தியா எந்த இடத்திலிருக்கின்றது என்று குறிப்பிடப்படவில்லை.

### சாயிபாபா...

அங்கு சட்ட ஒழுங்கு சீர்குலையும் அபாயம் காணப்படுவதாக தெரிவித்து, அங்கு 144 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புட்டபர்த்தியில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன், தேவையற்ற நடமாட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் சாயிபாபாவின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு, ஆந்திர மாநில முதலமைச்சர் முக்கிய சந்திப்பினை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### தீவகத்தில்...

அமைவதற்காக தீவகப்பிரதேசமான வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சாட்டிக் கிராமம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அப் பிரதேசத்தில், பிரதேசசபைக்கு சொந்தமான காணித் தொகுதிக்குள் அமைப்வதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுவருவதாகவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த தொழிற்சாலையின் ஊடாக சுமார் 75 பணியாளர்கள் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கு வழிகோலும் எனவும் இவ் உற்பத்திதொழிற்சாலை ஊடாக தீவகப்பிரதேச கிராமிய மக்களின் வாழ். வாதாரத்தினை முன்னேற்ற வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி உற்பத்தி தொழிற்சாலையில் பிரதானமாக உற்பத்தியான தீவக பிரதேசத்தில் விரயமாகும்

தீவகத்திலுள்ள மேலதிகமான கள்ளினைப் போத்தல்களில் அடைத்து தென்பகுதிக்கு அனுப்பி புதிய சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதோடு, பனை உற்பத்தி தொடர்பான சுயதொழில் ஊக்குவிப்பினையும் மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

### பிரபாகரனின்...

நிலையில் ஐ.நா குழுவின் அறிக்கை சர்வதேச சட்டத்திற்கு முரணாக தயாரிக்கப்பட்ட அறிக்கை எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

இந்த அறிக்கை தொடர்பில் அண்மையில் ரஷ்ய தூதுவரும் தமது கண்டனத்தைத் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### யாழ். குடாவில்...

அவ்வாறான வேலைத் திட்டங்கள் ஊடாக சமூகத்தை புதிய வழியில் மாற்றியமைக்க முடியும் என்பதுடன், அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தை அரசின் ஊடாகவும் ஏனைய வழிகளுக்கு ஊடாகவும் எப்படிப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது தொடர்பாகவும் சமுர்த்தி உத்தியோகத்தர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டுமென அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

### வடக்கு -கிழக்கு..

உருவாக்கப்பட்டு அங்கு தமிழ் தெரிந்த நீதிபதிகள் நியமிக்கப்படவுள்ளதாக நீதித்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்தச் சூழல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதித்துறையின் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்பட்டிருந்தது. அத்துடன் அப்பிரதேசங்களில் செயற்பட்ட பல நீதிமன்றங்கள் மூடப்பட்டிருந்தன. தற்போது நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் அமைதியான சூழல் நிலவும் சூழ்நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதித்துறையின் செயற்பாடுகளை மீண்டும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக நீதிமன்றங்களை ஸ்தாபிப்பது குறித்தும், அதற்கு தமிழ் தெரிந்தவர்களையே நீதிபதிகளாக நியமிப்பது குறித்தும் நீதிச் சேவை ஆணைக்குழுவுடன பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

# உல்லாசப் பயணிகள் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில்

(திருகோணமலை)

நீண்ட வருடங்களுக்குப் பின்னர் திருக்கோணமலைக்கு மிகப் பாரிய உல்லாசக் கப்பல் ஒன்று வருகை தந்துள்ளது. உல்லாசப் பயணிகளை ஏற்றிக் கொண்டு செவன் சீஸ் வொஜாஜெர் (Sevan Seas Voyager) என்ற கப்பல் திருகோணமலை அஷ்ரப் இறங்கு துறையை நேற்று வெள்ளிக்கிழமை காலை வந்தடைந்தது.

இதில் 700 அறைகள் உள்ளன. 1400 உல்லாசப் பயணிகள் இதில் பயணம் செய்கின்றனர். நேற்று மாலை 6.00 மணிக்கு இக்கப்பல் புறப்பட்டு காலிதுறைமுகத்தை நேற்று காலை சென்றடையும். அங்கிருந்து புறப்படும் இக்கப்பல் ஞாயிற்றுக் கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடையும். இந்தக் கப்பல் நேற்று முன்தினம் சென்னை துறைமுகத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்து திருமலைக்கு வந்ததும் குறிப்பிடத்தகது. இந்தக் கப்பல் உலகம் பூராகவும் உள்ள முக்கிய நகரங்களுக்கு செல்லவுள்ளது.

# இந்தியாவில் கடன் அட்டை மோசடி இலங்கைத் தமிழர் இருவர் கைது

போலியான கடன் அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தை மீளப்பெற்ற இலங்கையர்கள் இருவர் இந்தியாவின் மங்களகிரி நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அந்தோனிப்பிள்ளை நிமல்ராஜ், கனிட்ஸன் டினோ ஆகியோரே இந்நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சென்னையில் வசிக்கும் இந்நபர்கள் ஹைதராபாத்தைச்சேர்ந்த வினீல் சந்த்ரா என்பவரின் வங்கிக் கணக்கிலிருந்து 160,000 ரூபாவை மீளப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தான் பணம் எதையும் மீளப்பெறாத போதிலும், தனது கணக்கு மீதி குறைவடைந்துள்ளமை தொடர்பாக வங்கி நிர்வாகத்திற்கு வினீல் சர்மா புகாரிட்டபோதே இவ்விடயம் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி நபர்கள் இருவரும் ஸ்கிம்மிங் தொழில்நுட்பம் மூலம் போலியான கடன் அட்டைகளை தயாரித்து, மங்களகிரி நகரிலுள்ள எரிபொருள் நிலையமொன்றில் பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

மலேசியாவைச் சேர்ந்த சுதன் என்பவர் மூலம் இந்த ஸ்கிம்பிங் தொழில்நுட்பத்தை இவர்கள் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது சுதனை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் அத்தியட்சகர் ஏ. ரவிசந்திரா தெரிவித்துள்ளார்.



# விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுங்கள்

## நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களின், விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு கோரி, மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான 15 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய தேசிய கட்சி மற்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினாலும், இந்த மனுக்கள் பெரும்பாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பேருவளை மற்றும் பஸ்கொட பிரதேசசபைகளின் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மனுத்தாக்கல் செய்துள்ளனர். அத்துடன், கலிகமுவ மற்றும் மடோல்ல பிரதேச சபைகளுக்காக போட்டியிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் இருவர், மீண்டும் தமது விருப்பு வாக்குகளை எண்ணுமாறு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில், இதற்கு முன்னரும் 10க்கும் மேற்பட்ட இவ்வாறான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த மனுக்களில், பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர்கள், தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் அந்த அந்த உள்ளூராட்சி மன்றங்களின் வேட்பாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் தொடர்பில் எதிர்வரும் வாரம் குறித்த தரப்பினர்களுக்கு காரணம் கூற சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. இதேவேளை நீதிமன்ற நடவடிக்கைகளால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் மீள் தேர்தல் தொடர்பான தீர்ப்பு, மே மாதம் 5ஆம் திகதி அறிவிக்கபடும் என தெரிவிக்கப்படுகிறது.

# நிபுணர் குழு அறிக்கை விரைவில் அம்பலமாகும்

(ஜெனிவா)

இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை எவ்வித மாற்றமும் இன்றி விரைவில் முழுமையாக வெளியிடப்படும் என ஐ.நா. நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. அதேவேளை இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள இலங்கை ஆர்வம் கொண்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முற்படுவதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதி பேச்சாளர் பர்ஹான் ஹக் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதிகள் உட்பட இலங்கை அரசாங்கத்துடன் ஐ.நா. பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இவ்வறிக்கையை பகிரங்கப்படுத்தக் கூடாது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அவ்வறிக்கை முழுமையாக வெளியிடப்படும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கை முழுமையாக வெளியிடப்படும் எனக் கூறிய அவர், அதேவேளை இவ்வறிக்கை தொடர்பாக பதிலளிக்க அவகாசம் அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. நிபுணர் குழு தனக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறிச் சென்றுள்ளதா எனக் கேட்கப்பட்டபோது அந்த அறிக்கையே தனக்காக பேசும் என பர்ஹான் ஹக் கூறினார்.

# மகிந்த மீது விசாரணை வேண்டும் ஜெயலலிதாவின் விபரீத ஆசை

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விசாரணைக்கு உட்படுத்த இந்திய அரசாங்கம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அ.இ.அ.தி.மு.க. தலைவி ஜெ.ஜெயலலிதா நேற்று வலியுறுத்தியுள்ளார். ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையைத் தொடர்ந்து ஜெயலலிதா இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா.அறிக்கை மிகத் தெளிவானது. அது இலங்கை அரசாங்கத்தின் போர்க் குற்றங்களை பட்டியல்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த வலயம் மற்றும் வைத்தியசாலைகள் மீது இலங்கைப் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகவும் உணவு, மருந்து விநியோகத்தை தடுத்ததாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளதாக ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டதை சுட்டிக்காட்டிய ஜெயலலிதா, 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி மேற்கொண்ட 3 மணித்தியால உண்ணாவிரதத்தையும் விமர்சித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி, தான் மேற்கொண்ட உண்ணாவிரதத்தையடுத்து இலங்கையில் போர் நிறுத்தப்பட்டுவிட்டதாக கருணாநிதி கூறியிருந்தார். எனினும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரை மனிதப் படுகொலைகள் தொடர்ந்ததை ஐ.நா. அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது எனவும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

# இந்திய உழவு இயந்திரங்கள் வடக்கில் விநியோகம்

(கொழும்பு)

வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 600 மில்லியன் ரூபா பெறுமதியான 500 உழவு இயந்திரங்கள் வட மாகாணத்தின் பல இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானி கராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்கு இணைப்பு கருவிகளுடன் 500 உழவு இயந்திரங்கள் வட மாகாணத்திலுள்ள கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டதென்பதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ததாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக 52 உழவு இயந்திரங்கள் கடந்த நவம்பர் முதலாம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிர் அசோக் கே.காந்தா உத்தியோக பூர்வமாக கையளித்தார்.

இதேவேளை குறித்த ட்ரக்டர்கள் வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படாமல் வேறுதரப்பினருக்கு வழங்கப்படுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு - நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம்-109, முல்லைத்தீவு-112, கிளிநொச்சி-110, மன்னார்-100, வவுனியா-69 விநியோகிக்கப்பட்டன.

# கூவில் கிராம மக்களுக்கு கூரைத்தகடுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் தற்சமயம் மீள்குடியேறியுள்ள சேத்தாங்குளம், கூவில் பகுதி மக்களுக்கு வீடமைப்பதற்கு உதவியாக கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பளை பிரதேச மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் ஈ.பி.டி.பியில் வலிகாமம் இணைப்பாளர் எஸ்.பாலகிருஸ்ணன் (ஜீவன்), தெல்லிப்பளை பிரதேச செயலர் முரளிதரன், கிராம அலுவலர் அன்ரன்றோஸ், ஈ.பி.டி.பியின் வலி. வடக்கு பிரதேச அமைப்பாளர் அன்பு ஆகியோரால் மேற்படி கூரைத் தகடுகள் வழங்கி வைக்கப்பட் டுள்ளன. வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கூவில் கிராமத்தில் மீள்குடி யேறிய 55 குடும்பங்களுக்கும் சேத்தாங்குளம் கிராமத்தில் 45 குடும்பத்திற்கும் கூரைதகடுகள் வழங்கி வைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பொதுச் சந்தைக்கு கழிவறை இல்லை

## பொதுமக்கள் அவதி

(முரசுமோட்டை)

கிளிநொச்சி தர்மபுரம் பொதுச் சந்தை போதிய அடிப்படை வசதிகள் இன்றிய நிலையில் காணப்படுவதாகவும் நாளாந்தம் பெரும் சிரமத்தின் மத்தியிலே வணிக நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் வர்த்தகர்களும், நுகர்வோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள இப்பொதுச்சந்தையில் 120 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் பல்வேறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இங்கு கட்டடவசதி, குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் வர்த்தகர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

இதைவிட சந்தைக்கு வரும் நுகர்வோரும் இந்த அடிப்படை வசதிகள் இன்றி தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

கழிப்பறை வசதிகள் இல்லாமல் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாகவும் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் பொதுச் சந்தையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வர்த்தகர்களும், நுகர்வோரும் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# மீன் ரின்கள் மீது கதிர்வீச்சு சோதனை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் மீன் ரின்கள் தொடர்ச்சியாக கதிர்வீச்சு சோதனைக்கு உட் படுத்தப்படும் என இலங்கை அணுசக்தி அதிகாரசபை நேற்றுத் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு அதிகமாக கொரியா, சீனா, சிலி, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து மீன் ரின்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஜப்பானின் புகுஷிமா அணு உலை பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டதையடுத்து கதிர்வீச்சு தாக்கத்திற்குள்ளான நீர் பசுபிக் சமுத்திரத்தில் விடப்பட்டதாக இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

# லங்கா ஈ நியூஸ் செய்தி ஆசிரியரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செய்தி ஆசிரியரை கைது செய்யுமாறு பூகொட நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதிமன்றில் விசாரணையிலுள்ள வழக்கொன்று தொடர்பாக, உண்மைக்கு புறம்பான செய்தியொன்றை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே இவரை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செய்தி ஆசிரியரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பூகொட நீதிமன்ற நீதிவான் அரவிந்த பெரேரா பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அத்துடன், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள தொலைத்தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## நகரசபைக்கு...

இந்த நகரசபைக்கான புதிய தலைவரை நியமிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சட்டத்தின்படி வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே சபைக்கான தலைவரை தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம். இதன்படி பார்த்தால் திரு. எஸ்.எம்.ஜீ. நாதனுக்கு அடுத்தபடியாக அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் திரு.ரதன் என்பவரே. ஆனால் அவரைத் தலைவராக நியமிக்கப்படுவதை கட்சியின் சிரேஸ்ட தலைவர்கள் விரும்பவிலை. இவ்விடயம் காரணமாக கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். இதன் காரணமாக நகரசபைக்கான தலைவர் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே குறிப்பிட்ட சபைகளின் தலைவராக நியமிக்கப்ட்டிருக்கின்றனர். அதே நடைமுறையை மேற்படி நகரசபையிலும் பின்பற்றும்படி பொதுமக்கள் தமிழரசுக் கட்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சிரேஸ்ட தலைவர்கள் மட்டத்தில் பெரும் முறுகல்நிலை தோன்றியிருக்கின்றது. இதேநிலை தொடர்ந்து நீடிக்குமாயின் தேர்தல் சட்டத்தின்படி 90 நாட்களின்பின் வாக்கு எண்ணிக்கையில் அடுத்த படியாக உள்ளவரைத் தலைவராக நியமிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


# சமையலாளர் தேவை

யாழ்.நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் ஒன்றிற்கு

01. அனுபவம் உள்ள சமையல்காரர்

02. சமையல்துறையில் ஆர்வமுள்ளவர்கள் ஆகியோர் தேவை.

கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். விரும்புவோர் தமது விபரமடங்கிய விண்ணப்பத்தினை

விளம்பர இலக்கம் 01, தினமுரசு,
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்




(R/063)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.